# திறவுகோல்

ஆடி 2049
மாத இதழ்

செண்பக வனம்



பசுமை அழிப்புச் சாலை

வளர்ச்சிக்கு வயது 35

ஆடிப்பெருக்கு

இடம், பொருள், காதல்

வெளியீடு
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# பசுமை அழிப்புச் சாலை


மணிபாரதி தங்க சுந்தர்

இயற்கை வளங்கள் யாவும் செய்யப்படுகிறது பச்சைப் படுகொலை - அதற்கு மாற்றுப் பெயரோ பசுமை வழிச் சாலை...!

இரவு பகலாய் வியர்வைச் சிந்தி உருவாக்கப்பட்டது பூஞ்சோலையாக - அதை அழித்து மாற்றப் போகிறான் தார்சாலையாக...!

நம்மை சுற்றி வீற்றிருக்கிறது மலைகளே பாதுகாப்பு அரணாக - அதை உடைத்து உருமாற்றப் போகிறான் வெறும் மணலாக...!

பயிரை வளர்க்க தண்ணீர் இட்டவன் - இன்று அதன் உயிரைக் காக்க கண்ணீர் விடுகிறான்...!

கயவர்களை நம்பி வாக்களித்தோம் நம் வாழ்க்கை செழிக்க - அவனோ கார்ப்பரேட்டுடன் கைக்கோர்த்தான் நம் இனத்தை அழிக்க!

ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்து வரும் நிலம் - அதை விட்டு கொடுக்க எப்படி ஏற்கும் எங்கள் உள்ளம்!

நம்மை நாடி வந்த சில விருந்தாளிகளை முதலாளிகளாக்கி அழகுப் பார்த்தோம் - அதற்கு விசுவாசமாய் அவனே,<br>
உரிமையாளரின் உயிரைப் பறித்து வேடிக்கைப் பார்க்கிறான்!

இனியாவது சிந்திக்காமல் வாக்களிக்கப்பதை விடுத்து கண்ணீர் சிந்தாமல் வாழ வாக்களிப்போம்!

பல இன்னல்களைத் தாங்கி உயிரைக் கொடுத்து நம் முன்னோர்கள் இந்நிலத்தை நமக்கு தந்தார்கள் சோலையாக- அது விரைவில் மாற்றப்பட போகிறது பாலையாக!

நம் உயிருக்கு நிகரான இயற்கையுடன் இறுதிவரை உறவாட - தயாராகுவோம் இரத்தம் சிந்தினாலும்<br>
நித்தம் போராட!

**- மணிபாரதி தங்க சுந்தர்**

# அரசு வேலை விற்பனைக்கு



செந்தில்குமரன்
மன்னார்குடி

சமீபத்தில் வெளியான தமிழக அரசின் அறிவிப்பு, அரசு வேலைக்கு முயற்சிப்போரின் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒரு அறிவிப்பு மட்டுமா அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என நீங்கள் கேட்பது இங்கு வரை கேட்கிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளும் இனி கணிணி வடிவில் இணையத்தின் வாயிலாக மட்டும் எழுதும்படி மாற போகிறது.

முதலில் கேட்கும்போது மகிழ்ச்சியாக தான் இருந்தது. ஏனெனில் தேர்வு முடிவுகள் ஒரு சில வாரங்களில் வெளிவந்து விடும், தேர்வு எண்ணை வைத்து மதிப்பெண்களை அதிகம் போட பணம் கொடுப்பது போன்ற பல செயல்கள் தடுக்கப்படும், பேனாவை வட்டத்திற்குள் வைத்துக் கொண்டு வண்ணம் தீட்ட வேண்டிய அவசியம் இருக்காது, நேரம் குறையும் என்றவாறு பல தோன்றியது.

ஆனால் கணினியை உபயோகிக்க தெரிந்தவர்களுக்கு மட்டுமே இந்த தேர்வு முறை சரியானதாக இருக்கும் எனவும் தோன்றியது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், பல்வேறு விதமான பணிகளுக்கு, தகுதிக்கேற்ப தனித்தனியே தேர்வு நடத்துகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்கான தேர்வை மட்டும் கணினி முறையிலும், மற்ற தேர்வுகளை எழுத்து மூலமாகவும் நடத்தலாம்.

சற்றே யோசித்துப் பாருங்கள், முதன் முதலாக கணிணி உபயோகிப்பவர்களுக்கு Mouseஐ, எப்படி கையாள வேண்டும் என்பதே தெரியாது. ஒரு இடத்தை click செய்ய 15 நொடிகளாவது குறைந்தபட்சம் எடுத்துக் கொள்வார்கள். அப்படியிருக்கையில் தேர்வில் எப்படி குறித்த நேரத்தில் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க முடியும்?

எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளவரால் கணினியை திறம்பட இயக்க இயலுமா? தகுதிக்கேற்ப தேர்வெனில், தேர்வு முறையும் தகுதிக்கேற்றவாறு இருக்க வேண்டுமல்லவா!

வங்கி தேர்வு முறைகளை எடுத்துக் கொண்டால் கணிணி வழியாகவே நடைபெறுகிறது. அத்தேர்வை எழுதுபவர்கள் பட்டப்படிப்பு முடித்தவர்களும், பணம் செலுத்தி பயிற்சி வகுப்புக்குச் செல்வோரே பெரும்பான்மையானவர்கள். இந்த முறையை சாதாரண கீழ்நிலை அரசு வேலையுடன் ஒப்பிடுவது முட்டாள்தனம்.

இதோடு மட்டுமில்லாமல், இந்த கணிணி வழித் தேர்வு முறையை நடத்திக் கொடுக்க ஏல அறிவிப்பு விட்டுள்ளது தமிழக அரசு. இந்த ஏலத்தை, எந்த தனியார் நிறுவனம் எடுக்கிறதோ, அவர்கள் வைப்பது தான் சட்டமாக இருக்கும். தேர்வு வினாக்கள் முதல் நேரம் வரை அவர்கள் சொல்வது தான் பிரதிபலிக்கும். இந்த பயிற்சி நிறுவனத்தில் இணைந்து பயிற்சி பெற்றால் தான்

தேர்வில் வெற்றி பெற இயலும் என்றும் கூறுவார்கள்.

ஏற்கெனவே நீட் தேர்வைத் திணித்து மாணவர்களிடையே தன்னம்பிக்கையை இழக்கச் செய்துள்ள இந்த அரசு, தற்போது படித்து முடித்து வேலைக்குச் செல்லும் போதும் தேர்வு முறையில் மாற்றம் அறிவித்து மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது.

தேர்வு முறையில் மாற்றம் என்பது வரவேற்கத்தக்கது, ஆனால் தேர்வு எழுதுபவர்களின் நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழக அளவில் மட்டுமில்லாமல், அகில இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வுகளும் இனி கணிணி முறையில் தான் நடைபெறும் என மத்திய அரசும் அறிவித்துள்ளது.

ஆக இனிமேல் சாமானிய மக்களின் நிலையை கருத்தில் கொள்ளாமல் போனால், பணம் யாரிடம் இருக்கிறதோ, அவர்களுக்காக மட்டுமே படிப்பும், அரசு வேலையும் கிடைக்கும் என்ற நிலை உருவாகும்.

எதை நோக்கி இவர்கள் இந்த திட்டங்களை முன்மொழிகிறார்கள் என்றே புரிந்துக் கொள்ள முடியவில்லை. நாமும் யோசிப்பதில்லை, அதற்கே பழகி விட்டு பின்னர் புலம்பிக் கொண்டு இருக்கிறோம்.

**இரா. செந்தில் குமரன்**
மன்னார்குடி

# முயற்சி

எவன் ஒருவன் தன் முயற்சியைத் தூங்கவே வைத்து இருக்கிறானோ அவன் தோல்வி தான் அடைவான்.

அதுவே எவன் தன் முயற்சியை மெருகேற்றிக் கொண்டே இருக்கிறானோ, அவன் முயற்சி நிச்சயம் வெற்றிபெறும் .

எந்த வேலையிலும் அதிக உழைப்பு, முயற்சி இருந்தால் நாம் எளிதில் முன்னோக்கிச் செல்லாம்.

நாம் முயற்சி செய்த எந்த விசயமும் எளிதில் நடந்து விடாது. அதற்காக நாம் தோல்வி அடைந்து விட்டோம் என்று எண்ண கூடாது. நம் விடாமுயற்சி தான் நம் வெற்றி.

**ஜெ. ஜவஹர்**
**மன்னை**



# இரு பிரச்சனை - இரு அரசு இரு முடிவு



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

நல்லவர்களுக்குச் சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதன் மூலம் அனைவரையும் கெட்டவராக்குகிறார்கள் - பிளாட்டோ.

சல்லிக்கட்டு, காவிரி, மீத்தேன், கைட்ரோகார்பன், கெயில், கூடங்குளம், ஸ்டெர்லைட், நியூட்ரினோ இந்த வார்த்தைகளை தான் நாம் தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த வார்த்தைகளுக்கு பின்னுள்ள வலிகள் தான் போராட்டமாவதைப் பார்த்துப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏன் இந்த போராட்டங்கள்? இதுப்போன்ற பிரச்சனைகள் வேறு எங்கும் இல்லையா, பிறகெப்படி இங்கு மட்டும் இப்படி தினம் போராட்டமாக வாழ்க்கை நகர்கிறது? இங்கு மட்டும் எப்படி தினமும் போராடும் சூழல் ஏற்படுகிறது? அதற்கான காரணிகள் என்ன?

இந்த சூழலுக்கான நேரடி காரணிகள் அரசுகளும் மக்களும் தான். என்னது மக்களா! என உங்கள் உதடு துடிப்பதை உணர முடிகிறது. ஆம் மக்களும் தான். தாயின் கருவறையிலிருந்து குழந்தை வெளியில் வரும் பொழுதே அழுதுக் கொண்டே தான் வருகிறது. அக்குழந்தைக்கு அழுவதை யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. பிறகெப்படி அக்குழந்தைக்கு அழ தெரிகிறது? அது தான் இயற்கை. குழந்தை முதலில் தன்னிச்சையாக பழகும் குணம் அழுகை. அது தன்னுடைய இருப்பை தெரியப்படுத்த, தன்னுடைய பசி, பிணி எதிர்ப்பு போன்றவற்றை தெரிவிக்க வெளிப்படுத்தும் குணம் தான் அழுகை.

குழந்தை அழுகவில்லை எனில் அதனுடைய தாயுக்கும் தெரியாது அதற்குண்டான பிணியை. தாயிற்கு பிணி தெரியவில்லை எனில் அப்பிணிக்கு மருத்துவம் பார்க்க இயலாமல் குழந்தையை இழக்கும் சூழலும் ஏற்படும். இந்த அடிப்படை ஆரம்ப குணாதிசயம் தான் நம் மக்களுக்கு இருக்கிறது. தனக்கு ஒரு பிரச்சனை என வரும் பொழுது குழந்தை அழுவதைப் போல் அப்பிரச்சனைக்கான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர், போராடுகின்றனர். அந்த பிரச்சனைத் தீர்ந்து விட்டால் தன் வேலையைப் பார்க்க சென்று விடுவர்.

அனைவரும் மனிதர்கள் தானே! அனைவருக்குள்ளும் இந்த குணம் இருக்க தானே செய்யும்! அதெப்படி தமிழகத்தில் மட்டும் இந்த போராட்டங்கள் பிற பகுதியை விட அதிகம் நடக்கின்றன? குழந்தைக்கு இயற்கையாக இருக்கும் அந்த அழுகை, அதன் பசியை, பிணியை, இருப்பை, எதிர்ப்பைத் தெரிவிக்க பயன்படுகிறது. குழந்தை வளர, வளர அதன் சூழல்கள் அதனுடைய குணாதிசயத்தை மாற்றுகிறது. அது சாதி வாரியாகவோ, வர்க்க வாரியாகவோ, நிலம் வாரியாகவோ, மொழி வாரியாகவோ மாறும். பெருவாரியான இடங்களில் சமூகம் மக்களை சாதி, வர்க்க, மொழி, இன பேதங்கள் காட்டி அவர்களைச் சிறுமைப்படுத்தி அடிமை நிலைக்கு உட்படுத்தி விடுகின்றனர். அந்த அடிமை நிலையில் உள்ளவர்களுக்கு தன்னை அடிமைப்படுத்தியவர் என்ன சொல்கிறாரோ, அதனைக் கேட்டு அப்படியே நடக்க தோன்றும் அதனை தாண்டி அவர்களால் சிந்திக்க இயலாது. உங்களுக்கு தமிழக ஆட்சியாளர்கள் நினைவு

இங்கு வரலாம், அது இயற்கை தான். பொறுங்கள், மக்களைப் பார்த்துவிட்டு அவர்களை பார்க்க செல்வோம்.

இந்த அடிமை சூழல் உள்ளவர்களுக்கு அழுகை என்பது தன்னுடைய இயலாமையின் வெளிப்பாடாய் மட்டுமே இருக்கும். இங்கு தான் தமிழகம் வேறுபடுகிறது. மக்கள் பெருவாரியாக சமத்துவ சூழலில் இருப்பதால் அவர்களால் சுயமாக சிந்திக்க இயலுகிறது. சுயமாக சிந்திப்பதால் தனக்கு நேரும் அநீதியை எதிர்த்து குரல் கொடுத்து போராட இயல்கிறது. ஆக இன்றைய சூழலுக்கு மக்கள் ஓர் முக்கிய காரணம். அவர்களை போராட தூண்டும் அரசுகள் இன்றைய சூழலுக்கான அடிப்படை காரணம்.

எதற்காக இந்த அரசுகள்? அரசுகள் இல்லாமல் நம்மால் வாழ இயலாதா? நாமே ஏன் இந்த அரசு என்ற அமைப்பிற்குள் சிக்கிக் கொண்டுள்ளோம்? இன்னும் பல இனக்குழுக்கள் அவர்களுடைய இடங்களில் எந்த அரசுகளும் இல்லாமல் தானே வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. அவர்களும் மகிழ்வாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பிறகு நாம் மட்டும் ஏன் இந்த அரசுகள் அரசியலமைப்புச் சட்டங்கள் என்ற அமைப்பிற்குள் வாழ்ந்துக் கொண்டு அவர்களையே எதிர்த்து கொண்டிருக்கிறோம்? கொஞ்சம் யோசித்தால் புரியும். முலாம் போட்ட வார்த்தையாக சொல்லனும்னா ‘‘நாகரிக வளர்ச்சின்னு‘‘ சொல்லலாம். இல்லை நேரடியாக சொல்லனும்னா வசதியாக வாழன்னு சொல்லலாம். அரசுக்கும் வசதிக்கும் என்ன சம்பந்தம். நான் சம்பாரிக்கிறேன், நான் என்னுடைய வசதியை பெருக்கிக் கொள்கிறேன். இதில் எங்கிருந்து அரசு வருகிறது. இந்த கேள்வி உங்களுக்கு ஏற்படலாம். கொஞ்சம் சிந்தியுங்கள் புரியும். நாம் நம்முடைய வசதிக்காக எப்படி அரசுகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்து அவர்களை சார்ந்து வாழ்ந்து வருகிறோம் என்று.

உங்களின் அன்றாட செயல்களில் இந்த அரசுகளுடைய சம்பந்தம் இல்லாமல் எதுவுமே இருக்காது. காலையில் எழுந்து காப்பி குடிக்கணும்னாலும், அந்த பாத்திரம், காப்பித்தூள் , சர்க்கரை, எரிவாயு, அடுப்பு என அனைத்தும் அரசின் பங்களிப்பில்லாமல் இல்லை. இது ஓர் சிறைச்சாலை போல் தான். அவர்களின் முழு கட்டுப்பாட்டில் நாம் இயங்கி கொண்டிருக்கிறோம். என்ன நமக்கே தெரியாமல் நாம் இருக்கிறோம். நமக்கே தெரியாமல் நம்மை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிலை இன்னும் கொஞ்ச காலம் நீடித்தால் நமக்கு இந்த விடயங்களும் புரிய ஆரம்பித்து விடும்.

அரசுகள் என்பது மக்களுக்குத் தேவையானதை செய்துக் கொடுப்பதற்கும், மக்களுக்கு ஏதேனும் இன்னல் ஏற்படுமாயின் அதனை கலைவதற்குமே இங்கு கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆதிகாலத்திலிருந்து இவை இரண்டின் அடிப்படையில் தான் இவ்வரசுகள் உருவாக்கப்பட்டன. ஆதி மனிதன் வேட்டையாடும் பொழுது, அவனை வேட்டைக்கு வழிகாட்டவும், வேட்டையாடியவற்றை பகிர்ந்துக் கொள்ளவும், மிருகங்களிடமிருந்து தன்னை பாதுகாக்கவும் ஓர் குழு, தலைவனை தேர்ந்தெடுத்தனர். அறிவு, நேர்மை, தைரியம் போன்ற குணங்களைப் பெற்றவன் தலைவனாக்கப்பட்டான். இன்றும் ஓர் தலைவனுக்குரிய குணமென்பது இது தான்.

ஆனால் இன்றைய அரசுகள், மக்கள் தங்களுக்கு வழங்கிய பொறுப்புகளை அதிகாரங்களாக்கி மக்களையே அடிமையாக நினைக்கும் நிலையை எட்டிவிட்டன. அரசு என்பது எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு ஓர் சிறு உதாரணம். மே 25ம் தேதி அயர்லாந்து நாட்டில் ஒரு வாக்குப்பதிவு நடக்கிறது. வாக்குப்பதிவு எனில் தேர்தல் என நினைக்க வேண்டாம். ஒரு சட்ட

திருத்தத்திற்கு மக்களின் கருத்துக்களை பெறுகிறார்கள். அப்படி என்ன சட்ட திருத்தம் என்று பார்த்தீர்களாயின், அயர்லாந்து ஒரு கத்தோலிக்க கிருத்துவ நாடு. கருக்கலைப்பு என்பது பாவம் என்கிறது அவர்கள் மதம்.

அதனால் அங்கு கருக்கலைப்பிற்கு அனுமதி இல்லை. இந்த சூழலில் அங்கு வாழ்ந்த ஓர் இந்திய பெண் கருவுற்று அந்த கரு 17ம் வாரத்தில் சிதைகிறது. உடனே கருக்கலைப்பு செய்ய வேண்டும் ஆனால் அந்த நாட்டு சட்டத்தில் அதற்கு இடமில்லாததால் அவர்கள் கருக்கலைப்பு செய்ய இயலவில்லை. ஒரே வழி அப்பெண்ணை வேறு நாட்டிற்கு அழைத்துச் சென்று கருக்கலைப்புச் செய்வது தான். அதற்குள் அந்த கரு சிதைவினால் தொற்று ஏற்பட்டு அப்பெண்ணின் தொப்புள்கொடி வழி அத்தொற்று குருதியில் கலந்து அவர் இறந்து விடுகிறாள். இந்த செய்தியை அறிந்த மக்கள் அரசு கருக்கலைப்பிற்கு அனுமதி தர வேண்டும் என போராட்டம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். மத பற்று கொண்டவர்களோ இது பாவம் என்பதாக தங்கள் எதிர்ப்பை பதிகின்றனர். மக்கள் போராட்டம் முற்றுகிறது.

மக்களின் இடர்களை புரிந்து கொண்ட அரசு இந்த பிரச்சனைக்காக பொது வாக்கெடுப்பிற்கு ஏற்பாடு செய்கிறது. மே 25 நடந்த பொது வாக்கெடுப்பில் கருக்கலைப்பிற்கு அனுமதி அளிக்க 65 சதவிகித வாக்குகள் விழுகின்றன. இதனை ஏற்று நாடாளுமன்றம் கருக்கலைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டுவர சம்மதம் தெரிவிக்கிறது. இது தான் ஓர் மக்களுக்கான அரசு. மக்கள் ஓர் பிரச்சனைக்காக குரல் கொடுக்கும் பொழுது அது மத நம்பிக்கையை குலைக்கும் விதமாக இருப்பினும் மக்களின் குரலுக்கு மதிப்பளித்து வாக்குப்பதிவு நடத்தி மக்களுக்கான நியாயத்தை வழங்குகிறது.

அந்த மகத்தான வாக்கெடுப்பு நடந்த மே 25 க்கு 3 நாள் முன்னாள் , மே 22 இங்கு தமிழகத்தில் ஓர் போராட்டம் நடந்தது. இம்மக்களுக்கும் அயர்லாந்தை போல் ஓர் பிரச்சனை. என்ன அங்கு, அயர்லாந்தில் இயற்கையாக ஏற்படும் கரு வளர்ச்சி இடர்பாடுகளில் கருக்கலைப்பை அனுமதிக்க போராட்டம் நடந்தது. இங்கு இம்மக்களுக்கு ஓர் ஆலையினால் பெரும்பான்மையானோருக்கு கரு சிதைவு பாதிப்பு ஏற்படுகிறது, மலட்டுத்தன்மை ஏற்படுகிறது, புற்றுநோய் வந்து சாகிறார்கள், சுவாச பிரச்சனை வந்து சாகிறார்கள்.

இவர்களுக்கு அந்த ஆலையினால் ஏற்படும் சுற்றுசூழல் பாதிப்பால் செயற்கை காரணியால் ஏற்படும் இடர்களுக்காக தன்னுடைய உயிர்களை வருங்கால சந்ததிகளின் வாழ்வைக் காப்பாற்ற வீதியில் இறங்கி அரசுக்கெதிராக போராடுகிறார்கள். ஓர் நியாயமான அரசெனில் அம்மக்களின் பிரச்னையை தீர்க்க வேண்டும். ஆனால் இந்த அரசோ போராடிய மக்களையே தீர்க்க முன்வந்தது. ஆம் துப்பாக்கி சூடு நடத்தி 13 பேரை படுகொலைச் செய்ததோடு பலரை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஊனமாக்கியுள்ளது.

இந்த பிணம் தின்னும் அரசுகள் வீழும் வரை இங்கு போராட்டங்கள் தொடர்கதை தான். இவ்வரசுகள் வேண்டுமாயின் அடிமைகளாக இருக்கலாம். எம்மக்கள் எக்காலும் அடிமையாக இருக்க மாட்டார்கள். விரைவில் நல்ல அரசுகள் தோன்றும் இல்லையேல் அரசுகளே இல்லாத சமூகம் மலரும்.

**– ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

# தகப்பனின் மது
## அடிமைத்தனத்தால் மகளின் ஏக்க வரிகள்

கொஞ்சிப் பேசிட ஆசைப் அப்பா..!
உனக்கு கொஞ்சம்கூட தோனவில்லை அப்பா..!
உன் செல்லப் பார்வைப் போதும் அப்பா..!
செல்வம் ஒன்றும் தேவையில்லை அப்பா..!

சாக்குப் போக்குச் சொல்லி விட்டுச்
சாவைத் தேடிப் போகிறாயே அப்பா
சத்தம் போட்டு அழுகிறேன்,
உன் புத்திக்கெட்டுப் போனதினால்...

இஷ்டப்பட்டுப் பெற்றாய் என்று
நினைத்துக் கொண்டிருந்தேன்
கஷ்டப்பட்டு வளர்க்கிறாய் என இன்று
புரிந்துக் கொண்டேன்!

மது மேல் கொண்ட பற்று, உன்
மகள் மேல் சற்றும் கூட இல்லையே அப்பா...
சாதிக்கத் துடிக்கிறேன் உன் மகள், ஆனால்
நீ சாக துடிக்கிறாய் மதுவால்...

மற்றவர் காட்டும் நேசம் கூட, உன்
நெஞ்சம் காட்ட மறுக்குதப்பா...
வாழ வழிவகுத்துக் கொடுக்க வேண்டிய நீயே
வழி தவறிப் போவது சரிதானா அப்பா

உன் உணர்வையும் நீ மதிக்கவில்லை,
என் உறவையும் நீ ஏற்கவில்லை
அதனால்தானே!

மகளின் அருமை புரியாமல்
மது எனும் விஷத்திற்கு அடிமையாகி
அசிங்கங்களின் அடையாளமாகி விட்டாய்...
அப்பா...

- அபிநயா



ஓவியம்
கோமதி ஜெயம்

# வளர்ச்சிக்கு வயது 35



இராசசேகரன் மன்னை

இன்று நம்மை அழிக்கும் உளவியல் ஆயுதம் வளர்ச்சி என்ற சொல். இந்த வளர்ச்சி என்ற சொல் வஞ்சக வலையாக நம் மீது விரிக்கப்பட்டு முப்பத்தைந்து வருடங்கள் இருக்கலாம். ஆனால் இதற்கான அடிப்படை வேலைகள் அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது. அந்த வஞ்சக வலை நடுத்தர, மேல் நடுத்தர மக்களை வலைக்க தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகளைத் தொடுகிறோம். இதனை இன்று 35 வயதிலிருந்து 42 வயதுகளை தொட்டவர்களால் நன்றாக உணர முடியும்.

இந்த வலையில் சிக்கி வெளியே வர வழியறியாமல் திண்டாடுகிறவர்களும் இவர்களே. இதற்காகவே இவர்கள் வளர்க்கப்பட்டு இருக்கிறார்கள், ஏன் வார்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்றே கூறலாம். ஆழிப்பேரலை எப்படி கடலோர மாவட்டங்களை ஒரே அடியில் புரட்டி போட்டதோ அதே போன்று இந்த வலை எம்மக்களை புரட்டி போட்டு அவர்களின் வாழ்வியலையே மாற்றியமைத்து பெரும் உளவியல் ஊனத்தையே ஏற்படுத்திவிட்டது. நமது அன்றாட பயன்பாட்டில் தொடங்கி இன்று மீத்தேன், ஐட்ரோ கார்பன், நியூட்ரினோ, அணுவுலை என்று நம்முடைய வாழ்வாதாரத்தை அழிக்கிற ஆயுதமாக வளர்ந்து நிற்கிறது வளர்ச்சி என்ற ஒற்றைச்சொல்.

35 வருடங்களுக்கு முன் சுத்தம், சுகாதாரம், நாகரிகம் என்ற பிரச்சாரத்தை சிறுக சிறுக தொடங்கி 25 ஆண்டுகளுக்கு முன்பு தான் தொலைக்காட்சி பெட்டியின் வாயிலாக வீட்டின் வரவேற்பறையை ஆக்கிரமித்து அடுத்த வீட்டின் உளமார்ந்த உறவை வெட்டிவிட்டது. மக்களுக்கு உள்ள ஒரே உறவாக தொலைக்காட்சி பெட்டி உருவெடுத்தது. இன்னுமா கையால் பல் துலக்கிறீங்க என்று கேட்டுக்கொண்டே சாம்பல் உப்பா என்றான்! வண்ணப்பெட்டிகளில் பற்பொடி கொடுத்தான். சிறிது காலத்திலேயே பற்பசைக்கு தள்ளிவிட்டான். இன்று ஐம்பது வயதில் பூச்சி பல்லை புடுங்கிவிட்டு பல் கட்டவேண்டிய நிலை.

நன்றாக நினைவிருக்கிறது பள்ளியில் விளம்பரத்திற்காக இலவசமாக MILO கொடுக்கப்பட்டது. அதன் விளைவாக பல நிறுவனங்கள் எளிய மக்கள் வரையிலும் வந்தடைந்தது ஆனால் MILO பெரிய அளவில் போனியாகவில்லை. இருப்பினும் சுறுசுறுப்பாக செயல்பட BOOSTம் வேகமாக வளர COMPLAN ம் பிள்ளைகளின் ஊக்கமருந்தானது. தேன் மிட்டாய், இலந்த அடை, கம்மர்கட் என்று சிறு வணிகர்களின் உற்பத்தியை சுவைத்துக்கொண்டு இருந்தவர்களிடம் ஆசை மிட்டாய் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் மேல் தாள்களை சேகரித்து கொடுத்தால் இரண்டு மிட்டாய்கள் இலவசம் என்று உளவியலை தூண்டியது. அந்த உளவியல் சிறு வணிகத்தை உதறித் தள்ளிவிட்டு பெரிய நிறுவனமான ஆசை பின்னால் பேராசைப் பிடித்து அலைய வைத்தது. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் ஆசையையும் ஆக்கிரமித்துக்கொண்டது.

பல பெரிய நிறுவனங்களின் மிட்டாய்கள் பெட்டிக்கடை வரைக்கும் வந்து விட்டது. அந்த மிட்டாய்களை சுவைப்பது தான் நாகரிக வளர்ச்சி என்ற உளவியலும் விதைக்கப்பட்டு விட்டது. சாதாரணமாக ஒரு வீட்டிற்கு தேவையான மளிகை சாமான்கள் பத்துக்கு பத்து அறையிலேயே அடைத்துவிடலாம். ஆனால் இன்று நகரங்கள் வரையிலும் 25000த்திற்கும் அதிகமான

சதுரடியில் நான்கு மாடி ஐந்து மாடி பல்பொருள் அங்காடிகள் முளைத்து விட்டன.

இந்த அங்காடியின் உள்ளே சென்றால் நாம் அன்றாட தேவைக்கான அத்தியாவசிய பொருட்கள் மேலே கூறியது போல விரிவுபடுத்தப்பட்ட வகையில் பத்துக்கு நூறு அளவிலேயே முடிந்து விடும். மீதமுள்ள 24000 சதுரடி கொண்ட ஐந்து மாடிகளிலும் அநாவசிய பொருட்களே விற்பனை செய்யப்படுகின்றன. அதாவது அவசியமானதை விட அநாவசியமானது பல்லாயிரம் மடங்கு அதிகமாக நமது சிந்தனையை தூண்டி வாங்க வைக்கிறது. இதனால் நம்முடைய பொருளாதாரம் விரயமாகிறது. இந்த விரயமாகிற பொருளாதாரமே நமது சேமிப்பு. நம்முடைய சேமிப்பை இழப்பதால் கடன் வாங்குகிற அளவிற்கு தள்ளப்பட்டு அதனை சீர்செய்யவே அன்றாடம் போராடுகிறோம். கடன் போராட்டத்தில் உரிமைக்கான போராட்டத்திற்கு நேரம் ஒதுக்க முடியாத அளவிற்கு முடக்கப்படுகிறோம்.

உலக அழகியாக ஒன்றியத்தின் ஐஸ்வர்யா ராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை தொடர்ந்து வீட்டுக்கு ஒருவர் ஐஸ்வர்யா ராயாக மாறவேண்டிய தூண்டுதலை ஏற்படுத்தினர். முகத்திற்கு மஞ்சள் தேய்க்கும் பழக்கம் ஒழிந்து களிம்புகள், குழியல் கட்டிகள், முடி பசைகள் என பல அழகு சாதன பொருட்கள் அறிமுகமாயின. இன்று தோலின் மாறுதலுக்கு மருத்துவர்கள் அறிவுரைப்படி மருந்து உட்கொள்ளும் நிலையில் இருக்கிறோம். இருந்தாலும் இந்த களிம்புகளும் அழகு நிலையங்களும் நீக்கமற நிறைந்து விட்டன. அதனால் ஒன்றியத்திலிருந்து உலக அழகிகளை தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது.

செட்டியாரிடம் எண்ணெய் வாங்கி பயன்படுத்திய நாம் சுத்தமான எண்ணெய் என்று நம்பி பன்னாட்டு நிறுவன தயாரிப்புகளை பயன்படுத்த தொடங்கி முடிக்கு வலுசேர்க்கும் எண்ணெயே முடி உதிர்வுக்கு காரணமாகி விட்டது. அதேபோல உணவிற்கு பயன்படுத்தும் எண்ணெயால் வியாதிகள் அதிகமாகிவிட்டது. PEPSIயும் COCA COLAவும் பரம எதிரி நிறுவனங்கள். ஆனால் இங்கே 7 up என்றால் அங்கே sprite, இங்கே slice என்றால் அங்கே Maaza, இங்கே Marinda என்றால் அங்கே Fanta இப்படி அனைத்தும் ஒரே வகையான தயாரிப்புகள். ஆனால் போட்டி என்பது இவர்களுக்குள்ளே முடிந்துவிடும் இதன் விளைவாக உள்ளூர் தயாரிப்பான பன்னீரு, சோடா போன்ற பானங்கள் அழிந்துவிட்டன மேலும் இளநீர், பதநீர் அருந்தும் நிலை மறைந்து விட்டது. மேலும் நீருக்கு பேதமில்லை என்று வாழ்ந்த நாம், சுத்திகரிக்கப்பட்ட அதாவது எந்த சத்துகளும் இல்லாத நீரை பயன்படுத்த தொடங்கி விட்டோம்.

உணவே மருந்து, மருந்தே உணவு என்று ஐயமிட்டு உணவு உட்கொண்ட தலைமுறை, இன்று கண்டதையும் உணவாக எடுத்துக் கொண்டு அதோடு மருந்து மாத்திரைகளை உண்கிறது. நாவின் சுயமே கெட்டுவிட்டது. கந்தல் ஆனாலும் கசக்கிக்கட்டு என்று கூறியவர்களுக்கு அதனை எப்படி கசக்குவது என்பது தெரியாது. அந்த சலவைத்தூளைப் பயன்படுத்து, இந்த சலவை மருந்தை பயன்படுத்து என்று ஒரு குளத்தில் ஊரே கூடி துணி துவைத்து நீர் சிக்கனத்தில் மேலோங்கி இருந்த நம்மை நீரை பற்றிய அக்கரையே இல்லாத தலைமுறையாக்கி விட்டனர். வெற்றிலைப் பாக்கு போட்டு கொண்டிருந்த நமக்கு நாகரிகம் என்ற பெயரில் சிகரெட் அறிமுகமானது. கள் குடித்து கபம் காத்த நாம் தான் சாராயம் குடித்து கல்லீரலை அழித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு ரூபாய் கடன் வாங்க தயங்கிய சமூகம், வருமானத்திற்கு குடும்பம் நடத்திய சமூகம், கடன் வாங்கினால் தான் தரமான குடும்பத்தை நகர்த்த முடியும் என்ற உளவியலுக்கு தள்ளப்பட்டு

நடுத்தர மக்கள் இருசக்கர வாகனமும், மேல்நடுத்தர மக்கள் மகிழுந்தும் வைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதன் விளைவு எரிபொருள் தேவை அதிகரிப்பு, அதற்கு விவசாய நிலத்தை அழித்து கட்சா எண்ணெய் எடுப்பதில் தொடங்கி இன்று மீத்தேன், ஐட்ரோ கார்பன், செல் எரிவாயு எடுத்தாக வேண்டும் என்ற சிந்தனை வழிந்துத் திணிக்கப்படுகிறது.

மண்பானையில் சமைத்து வாழை இலையில் சுவைத்த நம்மிடம் அலுமினியத்தை அறிமுகப்படுத்தினான். அதை கடந்து பளீரென்று சொலிக்கும் எவர் சில்வரை பழக்கப்படுத்தினான். இன்று தாமிர முலாம் தடவிய பாத்திரங்களே வளர்ச்சியின் உட்சம் என்கிறான், அந்த தாமிரத்தை தயாரிக்க தனியார் நிறுவனங்களை அனுமதிக்கிறான். அதனால் பிறக்கிற குழந்தைக்கும் புற்றுநோய் வருகிறது. ஆலையை இழுத்து மூடு என்று மக்கள் போராடினால் காக்கை குருவிகளை சுட்டுக் கொல்வது போன்ற மக்களைச் சுட்டுச் சுவைக்கிறான்.

உள்ளூர் நெசவாளர்கள் நெய்த வேட்டி சேலைகளை உடுத்தி மிடுக்காக தலைநிமிர்ந்து நடந்த நம்மிடம் ஐரோப்பிய உடைகளை அறிமுகப்படுத்தினான். அதன் விளைவு காற்றுப்புகாத இறுக்கமான உடைகளை உடுத்துகிறோம். அதிலும் கொடுமை என்னவென்றால் அதை தயாரிப்பது நம்முடைய நிலத்தில், மூலப்பொருட்கள் பெறுவதும் நம்மிடமே, தண்ணீர், மின்சாரமும் நம்முடையது. ஆனால் வருமானம் அன்னிய தனியார் நிறுவனத்திற்கு. அதாவது நம்முடைய வளங்களை பெற்று நமது நிலத்தடி நீரையும் அபகரித்துச் சுற்றுச்சூழலை மாசாக்கி அவர்கள் வருமானம் பெறுவதற்கு அவனுடைய தயாரிப்புகளை மட்டுமே வாங்கும் அளவிற்கு நம்மை உளவியல் ஊனமாக்கிவிட்டான்.

தகவல் பரிமாற்றம் இல்லாமல் மனித வாழ்க்கை இருந்ததே இல்லை. அனைத்து காலங்களிலும் அனைத்து விதமான தகவல்களும் பரிமாறிக்கொண்டு தான் இருக்கிறோம், உறவுகளை வளர்த்து கொண்டு தான் இருக்கிறோம். புறா காலில் தூது அனுப்பிய காலங்களும் இருந்தன அந்த காலங்களில் ஒரு செய்தியை அல்லது உதவி கேட்டு வேண்டுதலை புறா காலில் கட்டி அனுப்பினால் தகவல் கிடைத்து நாம் கேட்டது கிடைத்தால் இதன் வழியில் நடக்க வேண்டும். தகவல் கிடைக்காவிட்டால் மாற்று வழியை தயார் நிலையில் வைக்க வேண்டும் என்று அனைத்து செய்கைகளையும் நுணுக்கி ஆராய்ந்து வாழ்ந்து வந்தோம். அதன் பிறகு மனிதனே நேரடியாக சென்று தகவல்களைப் பரிமாறி கொண்டான். அடுத்து கடிதம் வழியாக தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது வரையிலும் ஒவ்வொருவரும் அனைவரும் அனைத்தையும் பேசிக்கொண்டதில்லை, தேவைகளை மட்டும் பரிமாறிக்கொண்டதால் உறவும் உளவும் பலமாக இருந்தது.

பிறகு பல சலுகைகள் அறிவித்து வீடுதோறும் தொலைபேசியை நிலைநிறுத்தினார்கள். பின்னர் அலைக்கற்றை வலுப்பெற கைகளில் சினுங்கும் செங்கல் அளவில் கைப்பேசி வந்தது. பின்னர் கையடக்க கைப்பேசி வந்தது. இன்று தொடுத்திரை கைப்பேசி வழியாக உலகம் நமது உள்ளங்கையில் இருக்கிறது, அதில் தகவல்களை பரிமாறிக்கொள்ள பல வசதிகளும் உள்ளது. இதன் விளைவாக எந்தவித கட்டுப்பாடுமின்றி அனைத்து தகவல்களையும் பரிமாறிக்கொள்கிறோம். பின்விளைவுகளை பற்றிய கவலையின்றி வெளிப்படையாக விவாதிக்கிறோம் அதில் எளிதாக முரண்பட்டு விலகி வாழ்ந்து வருகிறோம்.

இதனால் கெட்டக்குடிகள் ஏராளம். உதாரணமாக அன்றைய காலங்களில் உறவு முறையில்

திருமணம் முடித்தோம். அதனால் இவருக்கு இவர் தான் என்று உறுதியாக இருந்தது. அதனால் அனைத்து ஊடல்களும், நக்கல் நையாண்டிகளும் அவர்களுக்குள்ளேயே முடிந்துவிட்டது. மற்ற குடும்பத்துப் பெண்களை ஆண்களும், ஆண்களை பெண்களும் விலக்கி வைத்து பார்த்தனர். ஆனால் இன்றோ உறவுகளை பகைகளாக பாவிக்கும் கருத்திலே மேலோங்கி விதைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆண்பால் பெண்பால் என்று இரண்டாக பிரிந்து எவரும் எவரோடும் எந்த முறையிலும் பேசலாம், பழகலாம் என்பதற்கான வாய்ப்புகள் எளிதாக அமைகிறது. அதிலும் பலவிதமான தவறுகளுக்கு வழிவகுக்கிறது.

அன்று திருமணத்திற்கு பிறகு தான் பேசி புரிந்துக் கொண்டார்கள். அவர்கள் பேசி புரிந்துக் கொள்வதற்குள்ளேயே குழந்தைகள் உருவாகி குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வும் வளர்ந்து அதன் வழியாக அவர்கள் புரிந்து தெளிந்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். ஆனால் இன்று நிச்சய ஒப்பந்தம் முடிந்த உடனே பேசிப்பழகி புரிந்து கொள்கிறேன் என்று திருமணம் குறிக்கப்பட்ட நாளிற்குள்ளே இருமனங்களும் இருவழிகளில் பயணிக்க தொடங்குகின்றன. இதனால் பல திருமணங்கள் பாதியிலேயே நிறுத்தப்படுகின்றன. புரிதலற்ற மனித விரோத குணங்களே மேலோங்குகின்றன.

இப்படி ஒவ்வொரு விடயங்களையும் திறனாய்வு செய்தால் நாம் இந்த இடைப்பட்ட காலத்தில் வளர்ச்சி எனும் பாதையில் எவ்வளவு தூரம் இழுத்து வரப்பட்டிருக்கிறோம் என்பதையும் நாம் உளவியலாக எவ்வளவு சிதைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் நம்மால் உணர முடியும். இதிலிருந்து மீளும் வலிமையும் வழிமுறையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர்கள் நமக்கு கொடுத்துவிட்டே சென்றுள்ளார்கள். நமது பாட்டன் தலைமுறை வரையிலும் அதனை பின்பற்றி காலத்தின் சுழற்சிக்கு தகுந்தாற்போல் நம்மை பக்குவப்படுத்தி வளர்ந்து நிலைத்தவர்களே நாம். ஆகையால் இச்சூழலில் இருந்தும் நம்மால் எளிதாக வெளி வர முடியும், வந்தாக வேண்டும் அதற்கான கட்டாயமும் நமக்கு ஏற்பட்டு விட்டது.

இவர்கள் நேரடியாக வளர்ச்சி என்று கூறி நமது வாழ்வியலை மாற்றி விடவில்லை. படிப்படியாக நமது உளவியலை சிதைத்துள்ளார்கள். முதலில் மொழியின் மீதான பற்றை சிதைத்தார்கள், அதனூடாக இனத்தின் மீதான உறவை அழித்தார்கள். நாம் பிடிப்பற்ற தனிமனித சிந்தனைக்கு வந்த பிறகே வளர்ச்சி எனும் விதையை விதைத்தார்கள். அதன் எல்லையாக நமது வாழ்விடங்களை அழித்து அபகரிக்க துடிக்கிறார்கள். மொழிச் சிதைவை உணர்ந்தோம், மீட்டெடுத்தோம். இனத்தின் பலத்தை அறிந்தோம், கட்டமைக்கிறோம். ஆனால் நிலத்தின் உரிமையை இழந்தால், வாழ்வாதாரத்தை தாரைவார்த்தால், வாழவழியற்ற அகதிகளாக திரிவோம், நமது அனைத்து அடையாளங்களையும் இழப்போம்.

பிறப்போக்கும் எல்லா உயிர்களுக்கும் என்ற மேலோங்கிய சிந்தனைகளைக் கொண்ட நாம் எவனுடைய வஞ்சக சூழ்ச்சியில் மயங்கி அனைத்தையும் இழக்க தயாராகிவிடுமா அப்படி ஒரு மரபணு நமக்கிருந்திருந்தால் இத்தனை ஆயிரம் ஆண்டுகளால் உலகின் இவ்வளவு மாற்றங்களுக்குப் பிறகும் நம்மால் நிலைத்து ஒரே மண்ணில் வாழ்ந்திருக்க முடியுமா? இதுவரையிலும் இயற்கை நம்மை அழித்திருக்கிறதே தவிர வேறெந்த செயற்கையான தாக்கங்களும் நம்மை அழித்ததில்லை. அனைத்திலும் மீண்டெழுந்தே இன்றும் நிலைத்து வாழ்கிறோம். இன்றே விழிப்புற்றால் இச்சூழ்ச்சியிலிருந்தும் மீள்வோம்.

வெற்றிலைக் கொடி படற அகத்தியை நட்டு வைத்தோம், அகத்திக் கீரையை ஆடு மாடுகளுக்கு

உணவாக்கி வளர்த்தோம், ஆடு மாடுகளின் சாணங்களை உரமாக்கி காடுகளை சமைத்தோம், காட்டுக்குள்ளே புழுப் புறட்டக் கோழிகளை விட்டோம், வளர்த்ததை எல்லாம் விற்காமல் ஐயனாருக்கு நேர்ந்துவிட்டோம், நேர்ந்துவிட்ட ஆடு கோழிகளை படையலிட திருவிழா கொண்டாடினோம், திருவிழாவிற்கு உற்றார் உறவினர்களை அழைத்தோம், உறவுகளோடு உட்கார்ந்து அவனுக்கு அவளெனப் பேசி முடித்தோம், பேசி முடித்ததற்கு அச்சாரமாக தோட்டத்தின் வெற்றிலையோடு பாக்கையும் கொடுத்தோம். இப்படி எவ்வித வஞ்சகமும் சூதில்லாமலும் இயற்கையோடு இணைந்து இன்புற்று வாழ்ந்தோம். இந்த வாழ்வியலை மீட்டெடுப்போம், இயற்கையை காத்து நிற்போம். எந்த சூழ்ச்சிகளும் நம்மை அழித்துவிட முடியாது என்ற நம்பிக்கையை மனதில் விதைப்போம்.

இன்று நம்மை அழிக்க துடிக்கிற இந்த வளர்ச்சி என்ற சொல் உலகமயமாக்கலில் இருந்தே வருகிறது. ஒருவகையில் உலகமயமாகாகலின் முன்னோடியும் நாம் தான். நாமே உலகின் அனைத்து மூலைகளுக்கும் சென்று வணிகம் செய்தவர்கள், அந்த வணிகத்தின் மூலம் மற்றவர்கள் தேவையைப் பூர்த்தி செய்து நம்முடைய பொருளாதாரத்தை வளர்த்து பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறோம். ஆனால் எவரையும் அழிக்க முற்படவில்லை. ஆனால் இன்றைய உலகமயமாக்கால் நமது வாழ்வாதாரத்தை சிதைத்து நம்மை அழித்து அவர்கள் பொருளாதாரத்தை வளர்க்க முயல்கிறார்கள். கற்றுக் கொடுத்தவர்களுக்கு தற்காத்து கொள்ள தெரியாது, கண்டிப்பாக நம்மைத் தற்காத்து நம்முடைய தற்சார்பு பொருளாதாரத்தை மீட்டெடுத்து இந்த வளர்ச்சி எனும் வஞ்சக வலையை அறுத்தெறிவோம்.

நாம் எப்படி உருவானோம், எப்படி நிலையாக நிலைத்து நின்றோம் என்பது எவருக்கும் தெரியாது. அப்படி இருக்க எப்படி அழிக்கலாம் என்பது மட்டும் தெரிந்து விடுமா? தீதும் நன்றும் பிறர்தர வாரா, நமக்கு எது நேர்ந்தாலும் நாமே ஏற்படுத்திக்கொண்டதாகவே இருக்கும். இதைத்தான் வரலாறுகளும் கூறுகின்றன,இயற்கை நம்மை அழித்திருக்கிறதே தவிர எவ்வித செயற்கையும் நம்மை அழித்ததில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் அதனை வென்று மீண்டெழுந்து நிலைத்து நின்றுள்ளோம். இனியும் அவ்வாறே நிலைத்து நிற்போம் நமது சந்ததிகளுக்கு நமது நிலத்தைப் பாதுகாத்து கொடுப்போம்.

வளர்ச்சி எனும் வஞ்சக வலையை அறுத்தெறிவோம்

**- இராசசேகரன் மன்னை**

# அப்பா

எழுத நினைத்தேன்,
அப்பாவியாய் நான் நின்றேன்,
அப்பபப்பா அப்பபப்பா...

கோடிக்கோடியாய் சந்தோசங்களை அள்ளிக்
கொடுத்தவர் நீ,
ஆயிரமாயிரம் தவிப்புகளுக்கு அர்த்தம்
சொன்னவர் நீ

பட்டாம் பூச்சியாய் பறந்த எனக்கு
வண்ணமிட்டவர் நீ

தோல்வியை சுமந்த போதெல்லாம்
வெற்றியைக் காண பல பாடங்களைப்
புகுத்தியவர் நீ

பாசத்தால் என்னைப் பூரிக்க வைத்தவர் நீ,
என்ன வேண்டுமென்ற ஆசையை என்
கண் பார்த்துப் புரிந்த அகராதி புத்தகம் நீ

நான் ஆசைப்படும் ஒரு பொருளுக்காய்
ஓராயிரம் பொருள்கள் வாங்கித் தந்தவர் நீ,
என்னை உருவாக்கியவன் நீ,
என்னை சிற்பமாய் செதுக்கியவன் நீ

எல்லாம் நீ,
நீ
என ஆன பின்பு,
இன்றோ
உன் உயரம் வளர்ந்துள்ளேன் காண
நீயில்லை

உதவிப்பேராசிரியையாய் உயர்ந்துள்ளேன்,
பெருமைப்பட நீயில்லை
உன் மகள் நானென தெருவில்
பெருமைப்பேச்சு,
கேட்க நீயில்லை


என் கல்யாண கோலமதில் வாழ்த்துரைக்க
நீயில்லை,
என் தாய்மையைக் கண்டு ரசிக்க
நீயில்லை,
வலியால் துடித்த போது ஆறுதலளிக்க
நீயில்லை,
என் குழந்தையோடு ஓடி விளையாட
நீயில்லை

தாத்தாவென என் குழந்தைக்
கட்டியணைக்க நீயில்லை,
எல்லாம் நீயென நினைத்தேன் - ஆனால்
எதிலும் நீயில்லை என்றானது...
ஆம்,
அன்றோ ஆயிரம் நினைவுகளுக்கு
சொந்தக்காரன் நீ...
இன்றோ
பல ஆயிரம் சுகமான சுமைகளுக்கு
நேசக்காரன் நீ!

**- இலக்கியா இளவரசன்**

# செண்பக வனம்

மன்னார்குடி
## ரா. ராஜேஷ்
எழுதும் தொடர் (பகுதி 5)



செண்பகவனத்தின் பாம்பணி ஆற்றங்கரைச் சாலையில் வந்தியத்தேவரும் அவரது பாதுகாப்பு வீரர்களும் குதிரையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது நடக்க இருந்த விச அம்பு தாக்குதலை மிக சாதுர்யமாய் மாணிக்கமும் அவன் நண்பன் கரியன் எனும் கரும்புலியும் தடுத்தனர். மாணிக்கம் செண்பகவனத்தின் மறவர்கள் தலைவரின் மகன், ஆதலால் எல்லா இடமும் அவனறிந்ததே. அதனால் வந்தியத்தேவரை மிக பாதுகாப்பாய் வனத்தை தாண்ட வைத்தவனை, விரைவில் அழைப்பு வரும் என்கிற குரல் மட்டும் எட்டியது.

கோட்டையை அடைந்த வந்தியதேவன் தன் காதல் மனைவியிடம் நேர்ந்தது அனைத்தோடு மாணிக்கத்தையும் கரியனோடு செண்பக வனத்தின் செழிப்பைப் பற்றியும் திருமேனியின் கடமையுணர்வின் மேன்மை பற்றியும் விவாதித்திருந்தனர்.

இதற்கிடையே தன்னை காண வந்த ஆழ்வார்கடியானை உபசரித்த மாணிக்கத்தை கரும்புகை புகட்டி கடத்திய குதிரை வீரர்களை அவர்கள் அறியாமல் பின்தொடர்ந்தான் ஆழ்வார்கடியான்......

கடத்தி செல்லப்பட்ட மாணிக்கத்தை தனது மோப்ப சக்தியால் கரியன் கண்டுபிடித்தான்.ஆழ்வாரும் கரியனுடன் இருந்தார் . இவர்களுக்காய் காத்திருந்த மாணிக்கமும் கடத்தல் கூட்டத்தில் ஒருவனை மட்டும் சிறைப்படுத்தி மற்றவர்களை அழித்து மூவரும் அங்கிருந்து தப்பித்து மாணிக்கத்தின் வீட்டிற்கு கைதியுடன் வந்தனர். ஆழ்வார் மாணிக்கத்திடம் கைதியை மறைத்து வைக்க சொல்லிவிட்டு அவனையும் மறைவாக பதுங்கி இருக்க சொல்லிவிட்டு காவலர்களைத் துணைக்கு அழைக்க ஊருக்குள் விரைந்தான் ஆழ்வார். அங்கனம் விரைந்த ஆழ்வார்கடியான் ஊர்க்காவலர்களை சந்தித்து தேவைகளின் விவரம் அறிவித்து சிவநேசன் வீட்டிற்கு வர பணித்து திரும்பிவந்த அடியானிடம் குதிரைவீரன் வேவுபார்த்து சென்ற விவரத்தை மாணிக்கம் கூற ஆழ்வார்கடியானோ மாணிக்கத்தையும் தன்னோடு தஞ்சை வருமாறு அழைத்தார். வர மறுத்த மாணிக்கத்தை, உறவினர்கள் சமாதானம் செய்து ஆழ்வார்கடியானோடு வீரர்கள் சூழ மாணிக்கத்தையும் கரியனையும் அனுப்பி வைத்தனர். தஞ்சை நெருங்கிய உடன் இவர்கள் வரவை அறிவிக்க ஆழ்வார்கடியான் முந்திச்சென்றான்..

இனி ...

### ............ அத்தியாயம் 2 ............

தஞ்சை கோட்டை...

மாணிக்கத்தின் முதல் பயணமது...

வழி எப்படி?.. எங்கே செல்வது?..எப்படி செல்வது?.. எவ்வளவு தூரத்தில் கோட்டையுள்ளது?.. என எதுவுமே தெரியாதே! என்ன செய்யலாம் என்று நினைத்த மாணிக்கத்தைத் திரும்பி பார்க்காமல் விரைந்தார் ஆழ்வார். போகும் ஆழ்வாரையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில், வெகுத்தூரத்தில் வானை முட்டும் ஒளி வெள்ளம் தென்பட்டது.

இது தான் தரணி போற்றும் தஞ்சை கோட்டையாக இருக்குமோ என்று நினைத்துக்கொண்டிருந்த அவன் கண்களிலிருந்து ஆழ்வார் மறைந்தார்.

அத்தனை வேகமாய் சென்ற ஆழ்வார்,
வெகு விரைவில் கோட்டையின் சிறுவாயிலை அடைந்தார். அந்த சிறுவாயில் வெகு சமீபத்தில் தான் உருவாக்கப்பட்டது. ஒற்றை ரதம் மட்டும் போகுமளவிற்கு அகலமிருக்கும் தற்காலிக பாலம். காவலும் கட்டுக்கோப்பும் மிக அதிகம். அவசியமில்லாமல் அந்த வாயிலை திறப்பது இல்லை. அகழிக்கும் வாயில் கதவுக்குமான இடைவெளியில் காவல் காத்த வீரர்கள், ஏதோ ஒரு பாட்டை உரக்கப் பாடி தூக்கத்தைத் துரத்திக் கொண்டு இருந்தனர். அவசரமாய் வந்த ஆழ்வாரை கண்ட அவர்கள் பாலத்தை அகழியின் குறுக்கே இறக்கினார்கள். அகழியைக் கடந்த ஆழ்வார், வாயிற் காவலர்களிடம் 'நான் இன்னும் அரை நாழிகையில் ஒரு மாட்டு வண்டியுடனும் சில குதிரை வீரர்களுமாய் வருவேன். ஆக யாரும் தடுக்கவோ சோதிக்கவோ அவசியமில்லை.அனிருத்தருக்கும் ஆள் அனுப்புங்கள்.'

'தகுந்த உத்தரவு இல்லாமல் நாங்கள் வாயிலை திறக்க முடியாது அடியாரே' என்றார்கள் வாயிற்காவலர்கள். அலுத்துக்கொண்ட ஆழ்வார், இடைக்கச்சையில் உள்ள ஓலையை எடுத்து நீட்டினார். வாங்கி பார்த்தவர்கள் நல்லது ஆழ்வார்க்கு அடியாரே,
உங்களை போக அனுமதிக்கிறோம் என்பவனின் பதிலை காதில் கூட வாங்காமல், சென்ற வேகத்தில் திரும்பினார் ஆழ்வார்.

அதுவரை மிதவேகத்தில் வந்தவர்கள், ஆழ்வார் வந்து இணைந்தவுடன் மீண்டும் வேகமெடுத்தனர். அவர்கள் போய் கொண்டிருந்த ராஜபாதையைவிட்டு சற்று விலகி வேறொரு பாதையில் அழைத்துச் சென்றார் ஆழ்வார். சற்று நேரத்திற்கெல்லாம் கோட்டையின் சிறுவாயிலை அடைந்தனர் அனைவரும். அகழியில் பாலம் மீண்டும் இறக்கப்பட்டது. கோட்டைக்குள் ஒன்றன் பின் ஒன்றாக புகுந்த அனைவரையும் ஆழ்வாரே வழிநடத்திக்கொண்டு அனிருத்தர் வீட்டை நோக்கிச் சென்றார். மாணிக்கத்திற்கு எல்லாமே கனவுலகத்தில் பயணிப்பதுப் போல இருந்தாலும் ஏதோ ஒரு எச்சரிக்கை உணர்வு ஒன்று உள்ளுக்குள் உறுத்த, மாணிக்கமும் கரியனும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டும், கொஞ்சம் பதட்டமாகவும் இருந்தனர்..

சுந்தர சோழனின் முதன்மை மந்திரியும் கல்வி கேள்விகளில் சிறந்தவருமான அனிருத்தர், உத்தம சோழன் அரியணை ஏறிய முதலாம் ஆண்டே தனது பொறுப்பிலிருந்து விலகி கொண்டார். தீவிர அரசியலிலிருந்துத் தன்னை முற்றிலும் விலக்கி கொண்டாலும் மரியாதை நிமித்தமாக அவரை சந்திக்க வருபவர்களை அவரால் தவிர்க்க முடியவில்லை. அதனாலேயே அவர் மாளிகையைக் கோட்டைக்குள் அமைதியான இடத்திற்கு மாற்றிக்கொண்டார். அந்த மாளிகைக்கு எல்லோரையும் வழிநடத்தி சென்றார் ஆழ்வார்.

ஆழ்வார் அழைத்து சென்ற வீதியின் கடைசி மாளிகை அது. அவர் நுழைந்த வாயிலின் உள்ளே

பெரிய திடலுக்கு பின்னே இருந்தது அந்த அழகான மாளிகை. அதன் பெருத்த திண்ணைகளுக்கு நடுவே தோரண வாயில் போல அழகிய வேலைப்பாடுடன் நிலைவாசல் இருந்தது. அந்த இரண்டு திண்ணைகளிலும்
கோரை பாய்கள் விரிக்கப்பட்டு, அதன் மேல் பஞ்சணைகளும் பக்குவமாய் அலங்கரித்து, தூங்கா விளக்குகள் அங்குள்ள இருட்டை விரட்டிக்கொண்டிருந்தது.
மூன்றாம் சாமம் ஆகிவிட்டதால் மெல்ல பனி இறங்க தொடங்கி இருந்தது.

வெள்ளி இலை போல  முடிகள் நரைத்து நிறைந்துள்ள மார்பில் மெல்லிய பருத்தி போர்வையைப் போர்த்திக்கொண்டு நடுவாசலில் அமர்ந்திருந்த அனிருத்தரின் உடம்பு கொஞ்சம் தளர்ந்து தான் போயிருந்தது. காரணம் வயதின் மூப்போ அல்லது உற்ற நண்பரும், பேரரசருமான சுந்தர சோழர் இறப்பா என்று அவருக்கும் தெரியாது.
வேகமாய் உள்ளே நுழைந்தவர்களை விரைவாய் ஆராய்ந்தது அந்த முன்னாள் அமைச்சரின் கண்கள்.

ஆழ்வார், அமைச்சரை பார்த்த உடனே குதிரையிலிருந்து இறங்கி கரம் குவித்து வணங்கினார். பின்னால் வந்தவர்களும் அவரை பின்பற்றியவர் போல வணங்கினர்.

மாட்டு வண்டியை வாசலுக்கு முன்பக்கம் கொண்டு வந்தனர். மாணிக்கமும் கரியனும் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்ததை
பார்த்த அனிருத்தர், நீதான் மாணிக்கமா ?
இவர்தான் கரியனா? என்று புன்னகைத்தார்.
மாணிக்கமா! என்னை எப்படி தெரியும்  இவருக்கு? இவர் யார்? என்று மனதில் எழுந்த கேள்வியுடன் அவரை ஆச்சரியமாய் பார்த்தான்.

'மறவர் குல மாணிக்கமே. என்ன அப்படி பார்க்கிறாய் ?
நீ வந்தியத்தேவரின் மீது நடக்கவிருந்த
மறைமுக தாக்குதலை முறியடித்தாய்
என்றும் நீயும் கரியனும் உற்ற நண்பன் என்றும் உன் ஊரிலிருந்து செய்தி அன்றே வந்துவிட்டது' என்றார் அனிருத்தர்.
உடனே அங்கிருந்த செண்பகவன வீரர்கள் கூட்டத்தில், கொஞ்சம் பேச்சுகள் எழுவதை பார்த்த அவர், அட! இவர்களை மறந்துட்டேனே. என்று தனக்குத் தானே சலித்துக் கொண்ட அனிருதர்.

'இங்கு யாருப்பா மூத்த வீரன்' என்று அவர்களை பார்த்துக் கேட்க,
அவர்களில் ஒருவர் முன்னே வந்தார்.

வந்தவனிடம் ' இந்தா, இந்த ஓலையைக் கோட்டைப் பெரிய வாயிலின் அருகே உள்ள வேளாண் சத்திரத்தில் கொடு.

அவர் உங்களுக்கு இரவு தங்க அறையும்
காலையில் உணவும் கொடுப்பார், நன்றாக பசியாறிவிட்டு போங்கள் சரியா என்றார்.

சரி ஐயா என்ற ஒற்றை சொல்லை மட்டும் சொல்லிவிட்டு, அந்த மூத்த வீரன் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார் அந்த மாளிகை வாயிலை விட்டு.

அது வரை காத்திருந்த அனிருத்தர்,
என்ன ஆழ்வார்க்கு அடியானே.
'என்ன இத்தனை அவசரமாய், இங்கு இத்தனைக் காவலுடன் வந்திருக்கிறாய்?

என்ன இந்த வண்டியில்? என்றுக் கேட்டுக்கொண்டே எழுந்தவர் காற்றில் குளிர் அதிகமாகிருப்பதை உணர்ந்தவராய், மேலே போர்த்திக்கொண்டிருந்த போர்வையை நன்றாக இறுக்கிப் போர்த்திக் கொண்டார்.

படியிலிருந்து இறங்கி வண்டியின் அருகே வந்தவர், அந்த மூடிய வில்வண்டியின் தடுப்பை அவரே திறந்தார். உள்ளே மூன்று அம்புகள் கிடந்தன. அது வண்டியின் பக்கவாட்டு தடுப்பைக் கிழித்த வண்ணம் உள்ளே கிடந்தன. அதை பார்த்துக்கொண்டே ஆழ்வாரிடம் விளக்கின் வெளிச்சத்தை உயர்த்தி எடுத்து வரச் சொன்னார். அவரும் எடுத்து வந்து அவருக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டே, ஐயா நாங்கள் கொண்டு வந்த கைதி, வண்டிக்கு கீழே உள்ள வைக்கோல் தொட்டியில் இருக்கிறான் சற்று பொறுங்கள் என்று கூறியவாறே மாணிக்கத்தையும் உதவிக்கு அழைத்தார் ஆழ்வார். 'சற்று பொறு, என் உதவியாளானையும் அழைக்கிறேன்' என்று 'நகுலா' 'நகுலா' என்று உரக்க குரல் கொடுத்தார் அனிருத்தர். உடனே வீட்டிற்குள்ளிருந்து 20 வயது மதிக்கத்தக்க இருவர் வந்தனர். வந்தவர்களைப் பார்த்து இவர்களுக்கு உதவுங்கள் என்று கூறி ஆழ்வாரையும் மாணிக்கத்தையும் சுட்டிக் காட்டினார். நால்வருமாய் சேர்ந்து மாட்டுவண்டியில் மாட்டிற்கு வைக்கோல் போட்டுவைக்கும் தொட்டிக்குள் மயங்கிக் கிடந்த கைதியைப் பத்திரமாய் வெளியே எடுத்தனர். ''பலே நல்ல சமயோசித புத்தி'' என்று பாராட்டிக் கொண்டே நல்ல மயக்கத்தில் இருந்தவனைப் பார்த்த அனிருத்தர் 'யாரடா இவன் ? இத்தனை பேர் காவலுடன் வந்தும் இவனை கொல்ல முயற்சிக்கப்பட்டிருக்கிறது எனில் அத்தனை பெரிய முக்கியஸ்தர் யாரடா' என்று ஆழ்வாரைக் கேட்டார்.

முந்தைய நாள் மாலையிலிருந்து அப்போது வரை நடந்த அத்தனையும் விளக்கமாக கூறினான். அதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்த அனிருத்தர், கைதியையும் பார்த்துக்கொண்டே இருந்தவர், ஆழ்வாரை சட்டென இடைமறித்து 'இவனை சோதித்துப் பார்த்தாயா ? '. என்றார். இல்லை என்பதை போல தலையாட்டிய ஆழ்வார், துளிகூட நேரமில்லை ஐயா .இதோ இப்போது செய்துவிடுகிறேன் என்று தூங்காவிளக்கை தூக்கிக்கொண்டு அவனருகில் சென்றவன், முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தான். கைதியின் காது மடலுக்குக் கீழே பிசிறிக்கொண்டிருந்த தாடியை இழுத்துப் பார்த்தான், அது அவன் கையோடு வந்தது. ஆர்வமாகிய ஆழ்வார் விளக்கின் ஒளியை நன்றாய் காட்டி கைதியின் முகத்தை நன்றாய் உற்றுப் பார்த்தவர், தீயினால் சுட்டது போல துள்ளி குதித்து பின்வாங்கினார். ஆழ்வாரின் இந்த திடீர் மாற்றத்தை வியப்பாய் பார்த்தனர் அனைவரும். வியப்பும் திகிலும் ஆச்சரியமும்
ஒருவித பயமும் கலந்த முகத்தோடு அனிருத்தரிடம் ஓடி வந்த ஆழ்வார், அவர் காதில் ஏதோ முணுமுணுத்தார்.

எதற்குமே அசராத அனிருத்தரும் ஒரு கணம் ஆடிப் போய்விட்டார். ஆச்சரியம் குறையாத முகத்துடன் ஆழ்வாரைப் பார்த்து உண்மையாக இது அவன் தானா? என்றார் அனிருத்தர்...

## பயணம் தொடரும் ...

# ஓர் எச்சரிக்கை



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

சித்தா, ஆயுர்வேதிக், யுனானி, ஹோமியோபதி, அலோபதி அனைத்துமே அறிவும், ஞானமும் நிறைந்த மருத்துவம் தான். உடம்புக்குள்ளிருந்து ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்ய வேண்டுமானால் தமிழ் மருத்துவம் தான் சிறந்தது. வெளி தாக்குதலிலிருந்து ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்ய வேண்டுமானால் ஆங்கில மருத்துவம் தான் சிறந்தது. அதாவது இயற்கை சீற்றம், தற்செயல் விபத்து, வேற்றுயிர் பகை இவற்றிற்கெல்லாம் கட்டாயம் ஆங்கில மருத்துவம் செய்ய வேண்டும். ஏனென்றால் போர்க்களத்தில் கை, கால்கள், இரத்தம் இழந்துத் துடித்துக் கொண்டிருந்தவர்களின் உயிரை மீட்டெடுக்க கண்டுபிடித்தது தான் ஆங்கில மருத்துவம்.

ஒரு விபத்தில் காலில் எலும்பு உடைந்தவருக்கு, இரும்பு கம்பியைக் கொடுத்து மருத்துவம் செய்து விரைவில் அவரை எழுந்து நடக்க வைக்க வைத்து விடுவார்கள். வெளியிலிருந்து நோய் கிருமிகள், உயிரினங்களால் பாதிக்கப்பட்டால் உடனே நோய் எதிர்ப்பு மருந்துக் கொடுத்து குணப்படுத்தி விடுவார்கள். இதைப்பார்த்த நாம், உள்ளிருந்து ஏற்படும் பிரச்சினைகளைச் சரிசெய்யவும் ஆங்கில மருத்துவம் தான் தீர்வு என நினைத்ததால் தான் இன்று 4448 நோய்கள் பட்டியலிடப்பட்டுருக்கிறது. அஜீரணமும், மலச்சிக்கலும் இல்லாமல் கழிவு தேங்காமல் கழிவு நீக்கினால் எது நோய், எதற்கு மருந்து ?

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

உடலில் ஏற்படும் கொழுப்பு கட்டிகளுக்கு, 15 வருடங்களுக்கு முன்பு பல நபர்களை நான் ஆங்கில மருத்துவத்திற்கு அழைத்துச் சென்றுள்ளேன். கட்டியை எக்ஸ்ரே எடுத்து ஆபரேசன் செய்து கட்டியை உடனிருப்பவரிடம் காட்டி விட்டு கேன்சர் கட்டியா என பார்க்க பரிசோதனைக்கு அனுப்புவார்கள். நான் அழைத்துச் சென்ற யாருக்குமே கேன்சர் என்று பரிசோதனை முடிவு வந்ததில்லை.

இப்போது கட்டி என்று சொன்னால் அந்த கட்டியில் ஊசி ஒன்றைச் செலுத்தி பரிசோதனைக்கு அனுப்புகிறார்கள். இது சாதாரண கட்டி என சொல்லிவிட்டு மீண்டும் வேறு பரிசோதனைக்கு அனுப்புகிறார்கள். அந்த பரிசோதனைக்கு உடனடியாக செல்ல வாய்ப்பில்லாமல் 2, 3 மாதங்கள் கழித்துச் சென்றால் அந்த கட்டி, புற்றுநோயின் மூன்றாவது நிலைக்கு வந்து விடும். 90 சதவிகிதம் காப்பாற்ற வாய்ப்பில்லை, 10 சதவிகிதம் காப்பாற்ற முடியும் என்கிறார்கள். அப்படி காப்பாற்ற வேண்டுமென்றால் பதினைந்து வருடங்களுக்கு முன்பு கண்டுபிடித்த ஊசி ரூ. 5,000, பத்து வருடங்களுக்கு முன்பு கண்டுபிடித்த ஊசி ரூ.10,000, ஐந்து வருடங்களுக்கு முன்பு கண்டுபிடித்த ஊசி ரூ. 1,00,000,சமீபத்தில் கண்டுபிடித்த ஊசி ரூ. 2,00,000, நீங்கள் எந்த ஊசி போட்டுக் கொள்கிறீர்கள் என்று நம்மிடமே கேள்வி கேட்கிறார்கள்.

பல வருடங்களாக இருந்த கட்டி, முதல் பரிசோதனையில் சாதாரண கட்டி இல்லை என்றது.

இரண்டு மூன்று மாதங்களில் எப்படி மூன்றாவது நிலைக்குச் சென்றது?. அதுமட்டுமில்லாமல், வேறு ஒரு இடத்திலும் உள்ளது என்று சொல்கிறார்கள். அது எப்படி பரவி இருக்கும்?

கட்டிகள் என்றால் நாம் உண்ணும் உணவு ஜீரணிக்கப்படாமல் கெட்ட கொழுப்பாக மாறி ஒரு இடத்தில் சேமிப்பாகிறது. அந்த கெட்ட கொழுப்பைச் சாப்பிட்டு உயிர் வாழும் செல்களுக்கு, கெட்ட கொழுப்பைச் சேர விடாமல் செய்து விட்டால் அந்த கிருமிகள் அழிந்துவிடும். ஜீரணிக்கும் உணவை ஜீரணிக்கும் முறையில் சாப்பிட்டால் செல்கள் இறந்து போய் கட்டிகள் கரைந்து விடும். இதைத்தான் சித்தர்கள், மகான்கள் அனைவரும் கூறுகிறார்கள். இதை செய்யாமல் உடலை சித்திரவதைச் செய்து, பணத்தையும் செலவு செய்து நேரத்தையும் வீணடிக்கும் ஆங்கில மருத்துவத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்.

தயவு செய்து கட்டிக்கு ஆங்கில மருத்துவத்திற்கு செல்லாதீர்கள், டெஸ்ட் என்ற ஊசியைப் போடாதீர்கள். அப்படி கட்டிக்கு ஆங்கில மருத்துவம் சென்று டெஸ்ட் ஊசி போட்டவர்களுக்கு தமிழ் மருத்துவர்கள் மருத்துவம் செய்யாதீர்கள்.

மற்ற எந்த நோய்க்கும் ஆங்கில மருத்துவம் கைவிடப்பட்டாலோ ஆபரேஷன் தான் தீர்வு என்றாலோ அவர்களை தமிழ் மருத்துவத்தால் மீட்டெடுத்து விட முடியும். மீட்டெடுத்த எங்கள் அனுபவத்தில் சொல்கிறேன்.

இது எங்களுடைய சொந்த அனுபவம். எங்கள் உடன்பிறவாத சகோதரிகள் பலர் அந்த ரணசிகிச்சையில் அவஸ்தைப்படுவதைப் பார்த்த என் கண்களிலிருந்து கண்ணீருடன் இதைச் சொல்கிறேன், இரு கை கூப்பிட்டு வணங்கி சொல்கிறேன், கொழுப்பு கட்டிகளைச் சரி செய்ய ஆங்கில மருத்துவத்திற்குச் செல்லாதீர்கள்.

**- ராணிச்சந்திரன்**

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY
வசந்தன்
hp: 9786828973
vasaclicks@gmail.com
vasa photography

# ஆடிப்பெருக்கு

கமண்டலத்தில் கட்டுண்டு காகத்தால்
கரை நிறைந்த காவிரியே!! காவிரியே!!
கரிகாலன் அணைகட்டி உன்னைக் காத்ததாலே
கரிகளால் போரடித்த காலம் காவியம் ஆனது ...

நெல் விளைந்த பூமியெங்கும் இன்று
புல்லுக்கே வழியின்றி விரிசலுற்று,
வில்லாய் வளையும் செம்மண் சாலையும்
கல்லும் நிறைந்த விலை நிலமானது.....

கர்நாடகக் கரையோரம் கைதாகிக்
கருநாகத்தின் வாயில் இரையாகிக்
கவிதைகளில் பாடுபொருளாகிய உன் தடம்
கட்டிடத்து மணல் அள்ளும் களமானது.....

ஆடிப்பெருக்கு நாளில் அன்னையாய் உன்னை
ஆரவாரித்துக் கொண்டாடிக் குதூகலித்து
ஆசையாய் உன்னை அள்ளி எடுத்து
ஆவல் தீர பருகியக் காலம் கனவானது.....

புதுமணத் தம்பதியினரின் புத்தாடை உடுத்தி
புதுவாழ்வு தொடங்க ஆடிப்பெருக்கு நாளில்
புன்னகைப்பூக்கள் கொண்டு பூசிக்க வந்தால்
புழுதியாகிக் கிடக்கும் நிலையும் உருவானது..

மீளாத துயரில் மாண்டு வீழும் மறத்தமிழனை
மீட்டு எழச்செய்ய, புதுவாழ்வு பெற்று ஒளிர,
மீதம் உள்ள உழவரையும் தமிழரையும்
மீண்டு வந்து காக்கும் உன் வரவே மகிழ்வானது....



கவிஞர் ஞானபாரதி
(எ) ந.மாமலைவாசன்

# இடம், பொருள், காதல்

இவ்வுலகத்தில் படைக்கப்படும் உயிர்கள் அனைத்திற்கும் தேவையான உறுப்புகளும் உணர்வுகளும் இணைந்தே படைக்கப்படுகின்றன. அவற்றுள் இன்றியமையாத உறுப்பானது இதயம், உணர்வானது காதல். இந்த காதல் உறவுமுறைகளுக்கு ஏற்ப அதற்கான முக்கியத்துவம் மாறுபடுகிறது. உதாரணத்திற்கு, தாய் தந்தை மீது இருக்கும் அன்பிற்கும், மனைவி காதலி மீது இருக்கும் அன்பிற்கும் இருக்கும் வித்தியாசமே காதல்.

இந்த காதலை இரு மனங்களுக்கானதாக இருந்தாலும் அவற்றை இணைக்கும் காரணிகளாக இருப்பவை இடமும் பொருளும் தான்.

இடம்

முன்பெல்லாம் காதலர்களுக்குப் பேசுவதற்கும் பொழுதுபோக்குவதற்கும் அமைந்தவை ஆற்றங்கரையும், கோவில்களும் தான். அன்று சந்திப்பதெல்லாம் மிகவும் அரிது. அப்படியே சந்தித்தாலும் பேசுவதற்கெல்லாம் வாய்ப்பு மிக குறைவு.
ஆற்றங்கரைக்குக் குளிக்க போகும் வழியில் நின்றுப் பேசுவதும், கோவிலுக்குச் சாமி கும்பிட போகும்போது கோவில் பின்புறம் நின்று பேசிக்கொள்வதுமாக இருந்தார்கள். அதும் சில மணித்துளிகள் தான். இப்படி சந்திப்பதற்கும் பேசுவதற்கும் வாய்ப்பில்லாதவர்கள் மனதில் காதல் மட்டுமே நிறைந்திருந்தது.

ஏனெனில் பல நாள் பார்க்காத காதலியைப் பார்க்க நினைத்து ஏங்கி நிற்பவன் முன்னால், அவள் ஒரு நொடி தோன்றினாலும் அவன் இதயம் அடையும் பரவசத்தை யாராலும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. சந்திக்க வாய்ப்புள்ளவர்கள் மனம் விட்டு பேசவும்,நேரத்தை கழிக்கவும், கடற்கரை, திரையரங்கம், பூங்கா போன்ற இடங்களை பயன்படுத்தினார்கள். கடற்கரை மணலும், அவர்களை வருடிச் சொல்லும் ஈரக்காற்றும், திரையரங்கின் இருளும், கோவிலின் அமைதியும், அவர்களின் தனிமையை உணரச்செய்து மனம் விட்டுப் பேச காரணிகளாய் இருந்தன.

அவர்கள் சந்திப்புகள் அதிகமாக மனதின் நெருக்கமும் அதிகமானது. அந்த அளவிற்கு இடம் முக்கியத்துவமாக இருந்தது. ஆனால் இன்றோ அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டது. ஆம் அனைத்தும் ஒரு பொருளின் உள்ளே அடங்கி விட்டது.

பொருள்

கற்றது கையளவு என்பார்கள்.ஆனால் நாம் கல்லாதது ''செல்'' அளவு என்னும் சொல்லும் அளவிற்கு அனைத்தையும் நமக்கு சொல்லி கொடுக்கும் கை அளவில் உள்ள செல் தான் அந்த பொருள். ஆம், இன்று நினைத்த நேரத்தில், இருக்கும் இடத்தில் இருந்தே ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவும் பேசிக்கொள்ளவும் முடியும். ஆனால் கடிதம் எழுதிய காலத்தில் மறுகடிதம் வரும் வரை எதிர்பார்த்து காத்திருந்த பொறுமை எல்லாம் இன்று எள்ளளவும் நம்மிடம் இல்லை.

ஒரு செய்தி அனுப்பி மறு செய்தி வர ஒரு நிமிடம் தாமதமானாலும் மீண்டும் செய்தி

அனுப்புகிறோம். நேரில் பேசும் போது இருந்த வெட்கம் எல்லாம் இதில் மறைந்து போகிறது. நினைத்த போதெல்லாம் பேசுவதால் பேச எதுவும் இல்லாமல் சம்பந்தமே இல்லாத ஒன்றைப் பேசி அதனால் சண்டை வளர்த்துக்கொள்வதுமாக தான் நகர்கிறது இன்றைய காதல்.

பிரச்சனை பெரிதானால் "Lets breakup" என்று எளிதில் கூறி பிரிந்து உடனே மற்றொரு காதலை தேடுகிற அளவிற்கு நம்முள் உளவியல் மாற்றத்தையும் ஏற்படுத்துகிறது. பார்த்து பேசி பழகி காதல் வளர்த்தவர்கள் சிலர் இருந்தாலும், இன்று முகம் தெரியாதவர்களிடம் கூட வரம்பு மீறி பேசி தவறான பாதைக்கு வழிவகுக்குகிறது.

ஆகவே காதலிப்பவர்களுக்கு மனதில் திடமும், அதை வளர்ப்பதற்கு வெளியில் இடமும் அவசியம். கைப்பேசி காதலை தவிர்த்துக் கண் பார்த்துப் பேசி, மனம்திறந்து சிரித்து, கைக்கோர்த்து நடந்து காதலியுங்கள்  காதல் கப்பல் கல்யாண கரை சேரும் வரை.

நன்றி.



- பாலாஜி சுதந்திரராஜன்
மன்னை

# விட்டில் பூச்சிகள்!



குடித்து குடித்தே ...
இறந்து போனவன்
வீட்டில் ...!

துக்கம் தாங்காமல் ...?
கூடிக் கூடி ...
குடித்துக் கொண்டிருந்தனர் ...!

சிலர் ...!

விட்டில் பூச்சிகளாய் ...!?

முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# விவசாயி படும் பாடு

விவசாயம் விவகாரமாச்சு,
வெளிநாட்டுக் கம்பெனி வீதியெல்லாம் முளைத்திருச்சி

வங்கி கடனெல்லாம் தள்ளுபடி தந்து கட்சிக்கொடி எல்லாம் ஓட்டு வாங்கி போச்சு

எத்தனை சர்க்காரு இங்கு வந்து போனாலும் அத்தனையும் நோட்டுக்கு அடிமையாகி போச்சு

எல்லைச்சாமி ஒன்னு எக்கடா நிக்குது, சிறையுண்ட காவிரியும் சிக்கலில் தவிக்குது...
ஏரி குளமெல்லாம் வாய் பிளந்து நிக்குது, ஏகப்பட்ட கோமாளிகள் தினம் செத்து போகுது

ஒப்பாரி வச்சு கிளவி ஓரம்கட்டி கிடக்குது மும்மாரி பொழிந்த வானம் மூச்சடக்கி நிக்குது

பாரம் சுமந்த வண்டி மாடு பரணியிலே கிடக்குது, விவரம் அறியாத வெளிநாட்டு நாரையொன்னு வெடவெடத்து நிக்குது

பட்டாம் பூச்சியும் மாட்டுச் சாணமும் மந்தையில காணுமே, கேடுகெட்ட கருவேலம் கெண்டைக் காலை கிழிக்குதே...

களத்து மேட்டு மேல கருக்காய காணுமே நெல்லுகொட்டும் பத்தாயமும் நிலைகுலைந்து நிக்குதே...

வெள்ளைக் கொக்கெலாம் வெளிதேசம் போயிடுச்சு ,வெள்ளம் வந்த கதையெல்லாம் வெகுநாளாய் போனதய்யா...

பச்ச புள்ள அழுகுது, பசு மாடு கத்துது, தெளிச்ச எள்ளு வாடுது, தேகமெல்லாம் நோகுதய்யா...

மந்தையில நின்ன மாடு சந்தைக்கு போயிடுச்சி, கொல்லையில போறவனுங்க கொஞ்சம்கூட இறங்கலயே

இன்னொரு கதையையும் எழுதிவாரேன் பாருமய்யா,

ஆத்துல வெள்ளம் வரும்,
வாய்க்காலில் ஊத்துப் பெருகும்,
வரப்புல நண்டு ஊரும்,
வயல்ல சேறும் மணக்கும்...

விதைத்த விதையெல்லாம் மண்ணை முட்டி பிளக்கும், தப்பித்த கடலை எல்லாம் காக்காவுக்கு இரையாகும்...

பசித்த பசுவெல்லாம் புல்லோடு கதை பேசும், செம்மறி கூட்டமெல்லாம் மந்தையிலே

சிறையாகும்...

கத்தரியும் வெண்டையும் கைக்கோர்த்து நிற்கும், கடலையும் சோளமும் புடலையோடு வம்பிழுக்கும்...

வழி நெடுக ஊசித்தட்டான் வந்து வந்து போகும், நெல்லுயேத்தி மாடுரெண்டு  மல்லுக்கட்டி ஏறும்...

இதுவரைக்கும் புரியாத இரகசியம் இருக்குது எருமையின் காதிலே எம்காக்கா சொல்லுமே...

ஏரி குளமெல்லாம் நிரம்பி வழியும், வடிந்த தண்ணியெல்லாம் ஏரியிலே கூடும்...

தூண்டி முள்ளெல்லாம் மலிவா தொங்கும், துள்ளிவரும் கெண்டையெல்லாம் கம்மாக்குள்ளே பதுங்கும்...

சிட்டும் கிளியும் சிறகடித்து ஓடும், வலை விரித்த வேடன் வாயடைத்து நிற்பான்....

நட்டது இப்ப வரும்,
களையெடுத்தது  எப்ப வரும்,
கணக்கு போட்டு வச்சிருப்பா கங்காணி கிளவியொருத்தி...

தொட்டதெல்லாம் பொன்னாகும் விவசாயம் இங்கிருக்க, பட்டதெல்லாம் போதுமய்யா பக்குவமாய் கேளுமய்யா

காடும் மேடும்  கட்டிடமாய் போச்சு, திட்டங்களை தீட்ட கவர்மெண்டு துடிக்குது

கெயிலும் மீத்தேனும் கெத்தா நிக்குது செத்துக்கிடந்த காப்பரும் சாட்டையை சொலட்டுதய்யா

காவிரித் தாயை நீயும் கட்டவிழ்த்து பாருமையா பாவித் திட்டமெல்லாம் பறந்து ஓடுமய்யா...

போராடிக் களைத்தாச்சு,
பொறுத்திருந்து பாத்தாச்சு,
காவிரி இல்லையின்னா   கள்ளிக்கூட மிஞ்சாதய்யா...

நேத்து வந்த ராசா காத்திருக்க வேண்டாமய்யா, சோத்துல கை வைக்க சொட்டுநீர் போதாதய்யா,
மல்லு கட்ட வேண்டாமய்யா,
மனமிரங்கி வாருமையா,
காவிரி நீயும் தந்தால் கருவாடும் பூக்குமய்யா!

## – செங்குட்டுவன்

# நதி என்ற கரித்ரா நதி

நோக்கம்:
அசுத்தமற்ற குளமாக மாற்றுவது

மன்னார்குடி என்றாலே மண்ணின் மைந்தனாக அனைவரின் நினைவுக்கு வருவது பெரிய கோவில் என்றழைக்கப்படும் இராச கோபால சுவாமி திருக்கோவில். அக்கோவிலின் மற்றொரு அடையாளமாகவும், நம் மன்னையின் மிகப்பெரிய நீராதாரமாக இருக்கும் தெப்பக்குளம் என்று அனைவராலும் அழைக்கப்படும் கரித்ரா நதி தெப்பக்குளம்.

கோவில் பாதி, குளம் பாதி என்றழைக்கப்படும் மன்னார்குடியில் தான் இந்தியாவின் மிகப்பெரிய தெப்பக்குளமான கரித்ரா நதி அமைந்துள்ளது. 1158 அடி நீளமும், 847 அடி அகலமும், 22.516 ஏக்கர் பரப்பளவும் கொண்ட இக்குளம் மன்னார்குடியின் பெருமைகளில் ஒன்றாகும். வருடந்தோறும் ஆனி மாதம் பத்து நாட்கள் இங்கு தான் தெப்பத்திருவிழா நடைபெறுகிறது. பத்தாம் நாளான பௌர்ணமியன்று தெப்பம் நடைபெறுகிறது. குளத்தின் நடுவே வேணுகோபாலன் சன்னதி அமைந்துள்ளது.

வெகு காலமாகவே மன்னார்குடியின் கரித்ராநதி பெரியதா அல்லது திருவாரூரின் கமலாலயம் பெரியதா என்ற ஒரு சந்தேகம் இவ்வூர் மக்களிடையே இருந்து வருகிறது. நிச்சயமாக கரித்ராநதி தான் கமலாலயத்தை விட பெரிய குளம்.

இத்தனைப் பெருமைகளுக்கு சொந்தமான இக்குளத்தின் தற்போதைய நிலையைப் பார்த்தால் வரும் காலங்களில் அசுத்தம் நிறைந்த குளமாக மாறிவிடுமோ என்ற அச்சம் அனைவரின் மனதிலும் ஏற்படுகிறது...

ஏனெனில், ஆங்காங்கே குளத்தின் மேற்பரப்பில் நெகிழி(பிளாஸ்டிக்) குப்பைகளும் கண்ணாடி குடுவைகளும் பெருமளவு தேங்கி இருக்கிறது. அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து துர்நாற்றம் வீசுவதோடு கொசுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்பும் உள்ளது.

இந்த குப்பைகள் உண்டாக காரணம் இக்குளத்தை அன்றாடம் உபயோகிப்பவர்கள் தாங்கள் உபயோகப்படுத்தும் சோப்பு மற்றும் சாம்பு போன்றவற்றின் நெகிழி குப்பைகளை பெருமளவு குளத்திலேயே கொட்டுவதால் அவை சிறிது சிறுதாக தேங்கி அங்குமிங்குமாகவும் குளத்தின் ஓரங்களில் குப்பை தொட்டிப்போல் காட்சியளிக்கிறது..

இந்த அவலநிலை மட்டுமல்லாமல் இரவு நேரங்களில் குளத்தின் படித்துறைகளின் இருள்சூழ்ந்த இடங்களில் சில விஷமிகள் மது அருந்துவது மட்டுமல்லாமல் காலி குடுவைகளை அங்கேயே உடைத்து போடுவதால் கண்ணாடிச்சிற்கள் நிறைந்து ஆபத்தான படித்துறையாக காணப்படுகின்றது.

மழை நீர் : குளத்தை சுற்றிய பகுதிகளில் பெய்யும் மழைநீர் வடிவதற்க்கான எந்த சாத்திய கூறுகளுக்கும் வழியில்லாமல் சுற்றி மதில் சுவர் அமைந்திருப்பதால் வடிகால் வசதிகள் இல்லை..

அதனால் மழை நீர் அனைத்தும் சாலையிலேயே தேங்கி வீணாவதோடு குளத்தின் நீர்மட்டம் உயர வாய்ப்பில்லாமல் குளத்தில் மழைப் பெய்தால் மட்டுமே நீர்மட்டம் உயரும் வாய்ப்பு உள்ளது...

அதோடு, பாமனி நதியில் இருந்து நீர்பங்கீடு நம் குளத்திற்க்கு இருந்தாலும் பாமனியாற்றில் இதுவரை நீர்வந்தபோதிலும் நம் குளத்திற்க்கு நீர் வந்ததாக தெரியவில்லை. தற்போது உள்ள நிலைமையில் ஆற்றிலே நீரும் இல்லை.

தீர்வு:
இந்த மிகப்பெரிய குளத்தின் மேம்பாட்டிற்கு அரசு நிதியுதவி அளித்தும் நீர்பங்கீட்டு திட்டத்தை பாமணியில் நீர் வரும்பொழுது செயல்படுத்தவும் அரசிற்கு விண்ணப்பமாகவும், நகராட்சியின் சார்பில் குளத்தில் எப்பொழுதெல்லாம் குப்பை காணப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் சுத்தம் செய்வதோடு சுத்தமான குளமாக பராமரிக்குமாறும், இரவு நேரங்களில் மது அருந்தும் விசமிகள் மேல் காவல்துறை எச்சரிக்கை விடுத்தாலோ அல்லது எச்சரிக்கை பலகை வைத்தாலோ இம்மாதிரியான சம்பவங்கள் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது.

நம் மன்னையின் அடையாளமான இந்த மிகப்பெரிய தெப்பக்குளத்தை பேணிகாப்பது அனைத்து மண்ணின் மைந்தனுடைய கடமையாகப் பார்த்தால் இதைப்போன்ற அவல நிலைக்கு நம்முடைய எந்த குளமும் சீர்கேடாகாது..

மாற்றம் நம்மிலிருந்து ஆரம்பமாகட்டும்...!

நன்றி...

அன்புள்ள
**எஸ்.கே.பாலாஜி**
**மன்னை**

# மழை



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

மழையின் அவசியம் என்ன என்பது நமக்குத் தெரியும். ஆனால், மழை எப்படிப் பெய்கிறது? மழைப் பெய்ய என்ன காரணம் என்பது நம்மில் பலருக்கு முழுமையாக தெரியாது. மேகம் குளிர்ந்து மழைப் பெய்கிறது என்ற அளவில் மட்டுமே தெரியும். இந்த கட்டுரை மழைப்பொழிவின் காரணத்தைப் பற்றி விளக்கும் ஒன்றாகும்.

முதலில் ''நிலை மாறும் படி நிலை'' பற்றி தெரிந்துக் கொள்வோம்.

பொதுவாக இந்த உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் மூன்று விதமான படி நிலைகளுக்குள் அடங்கி விடும். திட, திரவ, வாயு நிலைகள்.

எந்த ஒரு பொருளும் இந்த மூன்று நிலைகளுக்குள் அடங்கும். அதே நேரத்தில் ஒரு நிலையை விட்டு அடுத்த நிலைக்கு மாறும் திறனும் உண்டு.

உதாரணமாக, திட நிலையில் இருந்து திரவ நிலைக்கு மாறுதல் ''உருகுதல் (melting)'' என்று பெயர். இதற்கு மெழுகு, பனிக்கட்டி ஆகியவற்றை எடுத்துக்காட்டாக சொல்லலாம்.

திரவ நிலையில் இருந்து வாயு நிலைக்கு மாறுதல் ''ஆவியாதல்'' (vaporization) எனப்படும். அதே போல் வாயு நிலையில் இருந்து திரவ நிலைக்கு மாறுதல் ''நீர்மமாதல்'' (condensation) எனப்படும்.

திரவ நிலையில் இருந்து திட நிலைக்கு மாறுதலை ''உறைதல்'' (freezing) என்றுச் சொல்லலாம்.

இதில் ஆவியாதல், நீர்மமாதல் இந்த இரண்டு முறைகள் மூலம் மழைப் பெய்கிறது.

தமிழ்நாட்டில் மழைப்பொழிவு என்பது மூன்று வகைகளில் நமக்குக் கிடைக்கிறது.

1. வெப்பச்சலனம்
2. தென்மேற்குப் பருவ மழை
3. வடகிழக்குப் பருவ மழை

1. வெப்பச்சலன மழை

அதிக வெப்பம் காரணமாக பூமியில் உள்ள நீர், ''ஆவியாதல்'' மூலம் வளிமண்டலம் சென்று அங்கே மேகத்தைக் குளிர வைக்கிறது. வெப்பகடத்தல் மூலம் (heat transfer) மூலம் மேகத்தின் வெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டு அதாவது ஈரப்பதம் அதிகமாகி, வாயு நிலையில் இருந்து திரவ நிலைக்கு மாறி, நீர்மமாதல் முறைப்படி மழையைப் பொழிய வைக்கிறது.

இதனால் தான் வெப்பச்சலன மழை, கோடைக் காலத்தில் மட்டும் கிடைக்கும். அதுவும் குறைந்த காலமே கிடைக்கும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள மேகம் மட்டுமே குளிர்ந்து மழையைக் கொடுப்பதால். மேலும் ஒவ்வொரு பகுதியின் வெப்ப நிலை மற்றும் நீர் நிலைகளைப் பொறுத்து மழையளவு மாறுபடும்.

2. தென்மேற்குப் பருவமழை

பூமியில் பல்வேறு இடங்களுக்கிடையே உள்ள வெப்பநிலை மாறுதல் காரணமாக, வளிமண்டலத்தில் உள்ள காற்றின் அடர்த்தி மாறுபடும். அதிக வெப்பம் காரணமாக நீர் ஆவியாகி காற்றின் ஈரப்பதம் அதிகமாகி அடர்த்தி கூடும். இது காற்று அழுத்தத்தை அதிகரிக்கும். ஒருபுறம் சூடான அடர்த்தி குறைந்த காற்று இருக்கும். அதன் அழுத்தம் குறைவாக இருக்கும். எனவே அடர்த்தி அதிகம் உள்ள காற்று, அடர்த்தி குறைவாக இருக்கும் காற்றின் திசையை நோக்கிப் பயணிக்கும்.எளியவரை வலியவர் ஆட்கொள்வதைப் போல.

இந்தியாவின் தென்மேற்கு திசையில் அரபிக்கடலில் இருந்து அதிக ஈரப்பதம் உள்ள காற்று, வட கிழக்கு பகுதிகளில் உள்ள சூடான அடர்த்தி குறைந்த காற்று திசையை நோக்கி பயணிக்கும். அப்படி பயணிக்கும் போது மேற்கு தொடர்ச்சி மலைகளால் அந்த குளிர்ந்த மேகம் தடுக்கப்படுகிறது. இதனால் வெப்ப மாற்றம் சிறப்பாக நடைபெற்று 'நீர்மமாதல் ''நிலை உருவாகிறது. இதனால் அந்த திசை முழுவதும் நல்ல மழை பொழிகிறது. இதில் மேற்கு திசையில் உள்ள கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா நல்ல மழையைப் பெறுகிறது. தமிழகம் கிழக்கு திசையில் இருப்பதால் அதிக மழைப்பொழிவை இந்த பருவ மழையால் பெற இயலாது. பின் அந்த தென்மேற்குக் குளிர்ந்த மேகங்கள் வடகிழக்குத் திசையை நோக்கி பயணித்து அங்கே உள்ள சூடான அடர்த்தி குறைந்த காற்றோடுக் கலந்து விடுகிறது.

3. வடகிழக்குப் பருவ மழை

இப்படியாக காற்றழுத்தம் அதிகம் உள்ள தென்மேற்கு பருவக்காற்று, வடகிழக்குத் திசையில் உள்ள காற்றோடுக் கலந்து அங்கு காற்றின் அடர்த்தியை அதிகரித்து, ஒரு வட கிழக்கு காற்று அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இந்த செயல் தொடர்ந்து நடைபெறும் போது ,வடகிழக்கு பகுதியில் காற்று அழுத்தம் அதிகமாகிறது. இங்கே தெற்கு திசையில் இந்திய பெருங்கடலில் சூடான அடர்த்தி மிகுந்த காற்று உருவாகிறது. (ஈரப்பதம் உள்ள காற்று தொடர்ச்சியாக வடகிழக்கு திசையை நோக்கி பயணித்ததன் விளைவாக).

எனவே இப்போது ஏற்பட்டு இருக்கும் புதிய காற்றழுத்த வேறுபாட்டின் காரணமாக வடகிழக்கு திசையில் இருந்து காற்று தென் மேற்கு திசையை நோக்கி நகர்கிறது. அந்த காற்றானது கிழக்கு தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டு ஒடிசா, ஆந்திரா, தமிழ்நாடு என கிழக்கு திசையில் உள்ள பகுதிகளுக்கு நல்ல மழைப் பொழிவைக் கொடுக்கிறது. பின், அது நகர்ந்து தென்மேற்குத் திசையை நோக்கி நகர்ந்து மீண்டும் தென்மேற்குக் காற்றில் அடர்த்தியை அதிகரிக்க செய்கிறது. பின் மீண்டும் இந்த செயல் சுழற்சி முறையில் தொடர்கிறது.

இந்த காற்று சுழற்சி முறை தான் நமக்கு பருவ மழையைக் கொடுக்கிறது. எனவே பருவ மழை அதிகமாவதற்கு மலைகளின் பங்கும், அதில் மேல் உள்ள மரங்களின் பங்கும் அதிகம். பூமியில்

நீரின் அளவு அதிகம் இருக்கும் போது தான் இந்த காற்றழுத்த மாறுபாடு அதிகம் உண்டாகும். எனவே மலைகள், மரங்கள் காப்போம். நீரை சேமிப்போம். நீர் நிலைகளைப் பாதுகாப்போம்.

சில சந்தேகங்கள் மற்றும் அதற்கான பதில்கள்

பருவ மழைக். காலத்தில் புயல் வருவதன் காரணம்?

பதில்: பொதுவாக குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவான காரணத்தால் புயல் சின்னம் உருவாகி உள்ளது என்று கூறுவார்கள். இதற்கு காரணம் காற்றில் உள்ள அடர்த்தி மாறுபாடு தான். இந்த மாறுபாட்டின் விகிதம் மிக அதிகமாக இருக்கும் போது காற்றின் வேகம் அதிகமாகும். அடர்த்தி மிக அதிகம் உள்ள காற்று, அடர்த்தி மிகக் குறைந்த காற்றை நோக்கி மிக வேகமாக பயணிக்கும். அதுதான் புயல்.

2) தென்மேற்கு பருவமழைக்கும் (சூன்) வட கிழக்கு பருவ மழைக்கும் (அக்டோபர்) இடையே 3 முதல் 4 மாதம் இடைவெளி மட்டுமே உள்ளது. ஆனால் வட கிழக்கு பருவமழைக்கும் (அக்டோபர்) தென் மேற்கு பருவ மழைக்கும் இடையே (சூன்) 8 மாதம் வரை இடைவெளி ஏன்? காற்று சுழற்சி என்பது சம தூரம் தானே, பின் ஏன் இந்த இடைவெளி?

பதில்: இதற்கு இடையில் வரும் பனிக்காலம் காரணமாக இருக்க கூடும். பொதுவாக வெப்ப மாற்றம் மட்டுமே பருவ மழையைக் கொடுக்கும். ஆனால் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை உள்ள காலநிலை அதிக வெப்ப மாற்றத்தை ஏற்படுத்தாமல் இருக்கலாம். பின் மார்ச் முதல் மே வரை உள்ள கால நிலை பெரும் வெப்ப மாற்றத்தை ஏற்படுத்தும் காரணத்தால் தான் பருவ காற்று உருவாகிறது.

எனவே மழை பெய்ய வெயிலும் அவசியம்.இதுதான் இயற்கையின் நியதி. காற்று, வெப்பம், மலை, மரம் இணைந்து தான் மழையைத் தருகிறது.

இயற்கையின் முக்கியத்துவம் உணருவோம்!

இயற்கையைக் காப்போம்!

## - மன்னை செந்தில் பக்கிரிசாமி

# நான்

பாதை அறியேன்,
பயணம் புரியேன்,
எதுவும் தெரியாது,
இதுவும் புரியாது,
எவையும் இங்கு லேசில் கிட்டாது.

இப்படியா? அப்படியா?வென
குழம்பித் தவித்த தருணங்கள்,
எப்படியும் என்ற விருட்சத்தில்
வேர் விட்ட பொழுதுகள்.

வெல்லத் துணிந்தேன்,
வேட்கை கிடையாது,
சொல்லத் துணிந்தேன்,
வார்த்தை அறியாது!
எவையும் அறிந்திட முயலாது
நடை பயில்கின்றேன்
இந்த மாயவுலகில்.

பலரில் சிலரை வென்றிடும்
வேட்கையில்,
வில்லெடுத்தேன்,
சொல்லெடுத்தேன்,
காதல் கொண்டே
கவிதைத் தொடுத்தேன்,
அந்த காதலையும்
கற்பனையில் நிறைத்தேன்...

இனி எதையும் சிறப்பாய் செய்ய
சித்தமாயிருக்க,
எமக்கு தெளிவு தந்த இவ்வுலகிற்கு
நன்றி

எப்போதும் போல
வாழ்த்துபவர்களை வணங்கி,
தூற்றுவோரைத் துதித்து,
இதோ பயணத்தை
ஆரம்பிக்கின்றேன்
நானாய்...



மன்னை ராம்



ஓவியம்
திருநிறைச்செல்வன்

# காட்சியின்பம்



த.வா.அஜய்பிரசாத்

அன்று ஓர் நாள் தென்மேற்குப் பருவக்காற்றுத் தென்னைகளை நடனம் ஆட வைத்தும், சாலையில் கிடந்த குப்பைகளை அகற்றி துப்புரவு செய்தும், கடந்து சென்ற பெண்களின் ஒப்பனைகளைச் சற்று தீண்டியதுமாய் இருந்த அழகிய காலை வேளை. ரசிக்க, கவனிக்க! சுற்றி இவ்வளவு நடந்தேறும் போது என் மனது ஏனோ ஒன்றை மட்டுமே நினைவு கூர்ந்தது.

குருதி ஒட்டத்தின் ஓசையை உணர்ந்துக் கூடவே மனதின் வெளிப்பாடும் கலந்து என்றாவது ஒரு யோசனை வந்து போகும். அதை நிறைவேற்ற, அதற்கு ஆவண செய்ய நெஞ்சம் துடிக்கும். அப்படிப்பட்ட அரிதான நாளாக தான் அந்த நாள் தொடக்கம் பெற்றது. அன்று தெரியாது வாழ்வின் அங்கம் பெரும் நாளாக அது அமையும் என்று.

நேராக கல்லூரி வாயிலின் காவலர்கள் கவனத்தைக் கடந்துப் பொருத்தப்பட்டிருந்த ஒளிப்பட கருவியிடம் புன்சிரிப்பைக் காட்டி, தேங்கி இருந்த மழைநீரின் சகவாசம் ஏற்படாதவாறு ஒதுங்கி பாதுகாப்பாக யோசனையைக் கடத்தி சென்று பேராசிரியர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றாகி விட்டது. பரபரப்பான வேளையில் என் வார்த்தைகளுக்கு செவி மடித்த அனைவரும் கூறிய ஒரே வார்த்தை சாத்தியமில்லை. நான்கு திசைகளிலும் சொல்லி வைத்தார் போல, ஒரே மாதிரியான பதில்கள். சரி இது ஒத்து வராது என்று அந்த யோசனையைக் கைவிட்டு வேறொன்றை முடிவு செய்தாகிவிட்டது. இருந்தும் மனம் தளர்ந்து இறுதியாக அடைந்தேன் அவரிடம்.

சிறு பூச்சி முதல் மனிதன் வரை அனைவரையும் உற்றுநோக்கும் குணம் உடையவர் அவர். வளாகத்தில் அவரைப் பற்றி முழுமையாக அறிந்தவர் வெகு சிலர். அந்த சிலரின் பட்டியலில் நான் இல்லாவிட்டாலும் அவரை பற்றிய ஒரு வடிவம் மனதினுள் இருந்தது.

ஆதி முதல் அந்தம் வரை என் யோசனையை எடுத்துக் கூறியதைப் பொறுமையாக கவனித்துக் கொண்டிருந்த அவர், கூறிய வார்த்தை சிறப்பு, இதுவரை இதில் ஆராய்ச்சி மிக குறைவு, முயற்சிசெய். வார்த்தைகள் குறைவாக இருப்பினும் அதில் உள்ளடங்கிய பொருட்கள் அதிகம் என்பதை உணர்ந்தேன். பட்டயம் வாங்க ஒரு சாதாரணமான ஒன்றையும், வாழ்க்கைக்கான ஒன்றையும் கூறினார். வியந்து இது எப்படி சாத்தியம் என்ற கேள்வியை முன் வைத்த பிறகு ஒரு பெரிய முடிச்சினை எளிதாக அவர் அவிழ்த்து காட்டிய தருணம் அது.

எவரும் எந்நேரத்திலும் ஒரு மாதிரியாக இருப்பதுச் சாத்தியம் இல்லாத ஒன்று. ஏனெனில் மகனுக்கு அப்பாவாகவும், மனைவிக்குக் கணவனாகவும், பெற்றோருக்குச் சிறந்த மகனாகவும், நாட்டிற்குச் சிறந்த குடிமகனாகவும் இருப்பதை எவராலும் சந்தேகிக்க முடியாது, நேரத்திற்கு ஏற்றாற் போல மாறுகிறார்கள் என்றுக் குறை சொல்லவும் வாய்ப்பில்லை. அப்படி சொல்பவர்கள் கொள்கை எனும் சில சிறையில் அடைக்கப்பட்டவர்கள் தான். சூழ்நிலைக்கு ஏற்றதுப் போன்று

மாறாமல் தனக்கு ஏற்ற மாதிரி சூழ்நிலையை மாற்ற நினைப்பவர்கள் என்று முடிக்கப்பட்டது அவரது சொற்கள்.

மேகங்கள் நகர்ந்துக் கதிரவனின் ஒளியைப் படர விட்டதுப் போன்று, ஒரு தெளிவு ஓட்டம் ஓடியது மனதினுள். இந்த வார்த்தைகளைச் சற்று அன்றாட வாழ்வில் பொருத்திப் பார்க்கும் பொழுது வள்ளுவரின் படைப்பை உணர்த்திப் போகும்.

பொருத்தி பார்க்க எண்ணிய நேரத்தில் திடீர் என்று ஒரு வெளிச்சம், அதின் வெப்பத்தை உணர்ந்து கண் விழித்து மேலே ஓடிய மின் விசிறியைப் பார்க்கையில் கனவு ஓய்வு எடுத்துக் கொண்டது. இருப்பினும் அந்த காட்சிகள் மனதோடுப் பதிந்து இருந்தது. படிக்கும் வாசகரின் மனதிலும் இவை ஒட்டிக் கொண்டுப் பதியும் என்ற நம்பிக்கையோடு.

## - த.வா.அஜய்பிரசாத்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்